தமிழ் முரசு

ஆசிரியர்: ம. பொ. சிவஞானம்

1951 - செப்டம்பர்

விலை 4 அணா

வெற்றி எட்டுத் திக்கும் எட்டக் கொட்டு முரசே!
வீரர் என்றும் வாழ்க என்று கொட்டுமுரசே!

தமிழ் முரசு

தொகுதி 6 : சென்னை 1951 ஜுலை-ஆகஸ்டு-செப்டம்பர் : பகுதி 15,16,17

பொருளடக்கம்

●

உடனே பிரியுங்கள்! 2

எழுத்து மாற்றம் 4

தமிழரசா - திராவிடஸ்தானா? — ம.பொ. சி. 7

குடியாட்சித் தமிழ்—தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் 9

பேசுவது எப்படி? — "மலைநாடன்" 17

தமிழரசு அமைக்க வாரீர் (கவிதை)
— வித்வான் ப. அரங்கசாமி 22

இலங்கையிலும் தமிழரசுப் போர்! - செல்வநாயகம் 24

ஈரான் எண்ணெய்த் தகராறு
— சோம. லெ. இலக்குமணச் செட்டியார் 28

★

தமிழ் முரசு

திருவள்ளுவராண்டு 1982 ஆவணி - புரட்டாசி

உடனே பிரியுங்கள்!

அண்மையில் வெளியிடப்பட்ட காங்கிரஸ் தேர்தல் பிரகடனத்தில், மொழிவழி மாகாணப் பிரிவினை, கொள்கையளவில் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. இந்த உறுதிமொழி புதிதன்று; நெடுங்காலமாக அளிக்கப்பட்டு வந்துள்ளதுதான். ஆகவே, மீண்டும் உறுதி செய்யப்பட்டதில் புதுமை ஒன்றுமில்லை. பண்டித நேரு அரசாங்கத்திடம் நாம் எதிர்பார்ப்பது வெறும் உறுதிமொழி அல்ல; உடனடியான நடவடிக்கை. மொழிவழி மாகாணப் பிரிவினைக் கொள்கையை அங்கீகரித்துக்கொண்ட பிறகு, அதை அமுல் நடத்தத் தயங்குவதில் அர்த்தமில்லை. மாகாணங்களை மொழிவழி பிரிப்பதில் ஏதோ சிக்கல் இருப்பது போல அடிக்கடி பேசுகிறார் பிரதமர் நேரு. அந்தச் சிக்கல் என்ன? எந்த மாகாணத்தைப் பற்றியது? என்பனவற்றைப் பிரதமர் நேரு தெளிவாகக் கூறவில்லை. அப்படியே சிக்கல் இருப்பதாகவே வைத்துக் கொண்டாலும், அதை ஜனநாயக முறைப்படி சீர் செய்ய வேண்டுமே ஒழிய, அந்தச் சிக்கலைக் காட்டி மக்களின் கோரிக்கையை ஒத்திவைத்துக்கொண்டு போவது ஆட்சிக்கு அழகன்று.

எல்லைபற்றிய சர்ச்சைகளை சம்பந்தப்பட்ட மாகாணங்களே தீர்த்துக்கொள்ளவேண்டும்; அதைத் தீர்த்து வைக்கும் மத்தியஸ்த வேலையைத் தாமோ அல்லது மேலிடத்து அரசோ மேற்கொள்ள முடியாது என்கிறார் பிரதமர் நேரு. ஒரு காலத்தில், இந்து-முஸ்லிம்களுக்கிடையே இருந்த சச்சரவைப்பற்றி இங்கிலீஷார் கூட 'இப்படித்தான் சொன்னார்கள். "நாங்கள் சுதந்திரம் கொடுக்கத் தயார். ஆனால், உங்கள் சண்டைகளை நீங்களே தீர்த்துக்கொண்டு, ஒன்றுபட்டுவந்து எங்களைக் கேட்கும்போதுதான் நாங்கள் சுதந்திரம் வழங்குவோம்" என்றார்கள். அந்த ஏகாதிபத்தியவாதிகளின் குரலிலேயே பிரதமர் நேருவும் பேசுவதென்றால், அப்புறம் மொழிவழி தேசிய இனங்களுக்கு நீதி

வழங்க யார் இருக்கிறார்கள்? சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரையில், ஆந்திரர் — தமிழரிடையேயுள்ள எல்லைத் தகராறு தீர்க்க முடியாததன்று. மனமிருந்தால் மார்க்கமுண்டு.

"பிரிக்கப்படவிருக்கும் மாகாணங்களின் பொருளாதார வளம், நிதி நிலைமை, நிர்வாக வசதி ஆகியவற்றையும் கவனித்தாக வேண்டும்" என்கிறார் பிரதமர் நேரு. நாமும் அதை அப்படியே அங்கீகரிக்கிறோம். ஆனால், இந்த வாதத்தை மொழிவழி மாகாணப் பிரிவினைக்கு முட்டுக்கட்டையாகப் பயன்படுத்தக் கூடாதென்பதுதான் நமது கோரிக்கை. அமையவிருக்கும் புதிய மாகாணங்களில் ஏதேனும் ஒன்று பொருளாதார வளத்தில் குறைவுடையதென்றால், அந்தக் குறையைப் போக்குவதற்கு வழி காணவேண்டிய பொறுப்பு மத்திய ஆட்சியுடையதாகும். அதற்காக அந்த மாகாணம் பிரிக்கப்படக் கூடாது என்று பேசுவதோ அல்லது பிரிவினையைக் காலம் குறிப்பிடாமல் தள்ளிப் போடவேண்டுமென்று வாதிப்பதோ பொறுப்பிலிருந்து தப்பித்துக்கொள்ள முயலுவதாகும்.

இன்றைய இந்தியாவில் எல்லாத்துறையிலும் தனது தேவையைத் தானே பூர்த்தி செய்துகொள்ளும் அளவுக்கு பொருளாதார வளம் படைத்த ஒரு மாகாணத்தை யாரேனும் சான்று கூற முடியுமா? முடியாது. ஏன்? உலகிலுள்ள பல நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்தியாவே பொருளாதார பலமற்ற நாடுதான். அதற்காக இந்தியா தனியரசு நடத்தத் தகுதியற்றது என்று கூறுவது? அப்படி வெள்ளைக்காரர்கள் கூறியபோது பண்டித நேரு கோபப்படவில்லையா?

இந்தியா முழுவதும் ஒரே நாடு; இந்தியர் அனைவரும் ஒரே சமுதாயத்தினர் என்ற தேசியத் தத்துவங்களின் அடிப்படையில் தான் நாம் குடியரசு இந்தியாவை நிர்மாணித்திருக்கிறோம். ஆகவே, இந்தியாவில் ஏதேனும் ஒரு மாகாணம் பொருளாதார வளமற்று இருக்குமாயின், இதர மாகாணங்களின் பொருளாதார வளம் அந்தப் பற்றுக்குறை மாகாணத்திற்குப் பயன்பட்டாக வேண்டும். இல்லையேல், "இந்தியா ஒரே நாடு" என்று பேசுவதில் அர்த்தமில்லை.

பிரிக்கப்படும் மொழிவழி மாகாணங்களின் நிதிநிலைமை சரியாக இருக்குமென்று தமக்குத் திருப்தி ஏற்பட வேண்டுமென்கிறார் பிரதமர் நேரு. ஒரு ஆட்சி சரிவர நடைபெற அதன் நிதிநிலைமை திருப்திகரமாக அமைய வேண்டியது அவசியந்தான். ஆனால், பிரிக்கப்படும் மாகாணத்தின் நிதி நிலைமை ஆரம்பத்திலேயே சரியாக அமைந்துவிடாது. பீகார், அஸாம், சிந்து, எல்லைப்புறம் ஆகிய மாகாணங்கள் பிரிக்கப்பட்ட ஆரம்ப காலத்தில், அவற்றின் நிதி நிலைமை பற்றுக் குறையாகத்தான் இருந்தது. அந்த

மாகாணங்களுக்குப் பல ஆண்டுகள் வரை மத்திய அரசாங்கம் பண உதவி செய்து வந்த பின்னர், நாளடைவில் அவற்றின் நிதி நிலைமை சரிப்பட்டுவிட்டது. அதுபோலவே, இப்போதும் பிரிக்கப்படும் மாகாணங்களில் ஏதேனுமொன்றின் பண நிலைமை பற்றாக்குறையாக இருப்பின், அம்மாகாணத்திற்கு மத்திய அரசாங்கம் பண உதவி செய்யக் கடமைப்பட்டிருக்கிறது. நிதி நிலைமை பற்றாக்குறையாக இருப்பதற்கு முக்கிய காரணம், வளமான வருமானங்களை மத்திய அரசாங்கம் தனது கையிலேயே வைத்திருப்பதுதான். அதற்காகவேனும மத்திய அரசாங்கம் பற்றாக்குறை மாகாணத்திற்குப் பணவுதவி செய்து தீரவேண்டும்.

சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரை பிரதமர் நேரு கூறும் சிக்கல்கள் எதுவுமிருப்பதாக நம்புவதற்கில்லை. இதை காங்கிரஸ் காரியக் கமிட்டியும் ஒப்புக்கொண்டிருக்கிறது. சிக்கலெல்லாம் பம்பாய் மாகாணத்தைப் பிரிப்பதில்தான் இருக்கிறது. ஆகவே, தாமதமின்றி சென்னை மாகாணம் மொழிவழி நாடுகளாகப் பிரிக்கப்படவேண்டும். முன்னர், ஆந்திரப் பிரிவினைக் குழுவினர் செய்த முடிவுகளில் சில ஆட்சேபனைக் குரியவையே. என்றாலும், அந்தக் குழுவின் முடிவை பொது அம்சமாகக் கொண்டு பிரிவினையை அமுல் நடத்துவதை தமிழ்மக்கள் வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை.

—●—

எழுத்து மாற்றம்

சென்னை அரசினர் அமைத்த எழுத்துச் சீர்திருத்தக் குழுவினரின் அறிக்கையை அன்பர்களறிவர். அந்த அறிக்கை உடனடியாக அமுல் நடத்தப்படுமென்றும் சென்னை அரசினர் ஆணை பிறப்பித்துவிட்டனர்.

தமிழ் எழுத்துக்களைச் சீர்திருத்தவேண்டியது அவசியமா? அவசியமானல், சீர்திருத்தம் எவ்வகைத்து? சீர்திருத்தத்தினல் ஏற்படும் பலன்கள் யாவை? என்பன குறித்து பன்மொழிப் புலவர் மீனட்சிசுந்தரனர் எழுதியுள்ள கட்டுரையைப் பிறிதோரிடத்தில் பிரசுரித்திருக்கிறேம். அதைப் படித்த எவரும் சீர்திருத்தக் குழுவின் அறிக்கையை முழு மனதுடன் வரவேற்பர் என்றே நம்புகிறேம்.

தமிழ், தெய்வ மொழி; ஆதிசிவன் பெற்று, அகத்தியனர் வளர்த்த மொழி; முதலையுண்ட பாலனை அழைத்த மொழி; எலும்பைப் பெண்ணுருவாக்கிய இன்பமொழி என்றெல்லாம் கதைகள் கூறிக் களிப்படையலாம். ஆனல், இந்தக் கற்பனைச் செய்திகளை வைத்துக்கொண்டு தமிழ் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடு

வது அறிவுடையார் செய்கையன்று. "தெய்வத் தமிழைத் திருத்துவதா?" என்று கேட்கிறது ஒரு எதிர்ப்புப் பிரசுரம். இந்தப் பிரசுரத்தை வெளியிட்ட தமிழ்பகனர், தமிழ் எழுத்துக்கள் இன்றுள்ள வடிவத்தில்தான் என்றென்றும் இருந்ததென்று நம்புகிறாரா? 'ஆம்' என்றால் அவரைப்பற்றி நாம் அனுதாபப்படுகிறோம். தமிழ் எழுத்துக்கள் எத்தனையோ முறை திருத்தப்பட்ட பின்னர்தான் இன்றுள்ள வடிவத்தை அடைந்திருக்கிறது. கல்வெட்டுக்களில் காணப்படும் வட்டெழுத்துக்களுக்கும், இன்று நாம் கையாண்டு வரும் எழுத்துக்களுக்கும் உள்ள வேற்றுமையே இந்த உண்மையை விளக்கப் போதுமானதாகும். முன்பெல்லாம் தமிழ் எழுத்துக்கள் திருத்தப்பட்டதால், அதன் தெய்வத்தன்மை குறைந்துவிடவில்லை என்றால், இப்போதும் குறையாது என்று அந்த அன்பர் ஆறுதலடையலாம்.

"வினோ யந்திரம் பிறமொழிகளில் பயன்படுத்தப்படாமலிருக்க தமிழ் மொழிக்குமட்டும் அவசரப்படுவானேன்?" என்று கேட்கப்படுகிறது. இது சரியான வாதமல்ல, டைப் அடிக்கும் யந்திரம், பிற இந்திய மொழிகளில் வருவதற்கு முன்னதாகவே தமிழில் வந்துவிடவில்லையா? அதுபோலவே, 'வினோ' யந்திரத்தையும் முதன் முதலில் வரவேற்கும் பாக்கியம் பிற இந்திய மொழிகளுக்கு இல்லாமல் தமிழுக்கு மாத்திரம் கிடைத்ததென்றால், அது தமிழர் பெருமைப்படக்கூடியதாகும்.

எழுத்துச் சீர்திருத்தக் குழுவினர் செய்துள்ள மாற்றம், பழைமையை ஒட்டியதேயன்றி, பழைமைக்கு எதிரான புதுமையன்று. இதை வேறோரிடத்தில் உள்ள கட்டுரையில் பன்மொழிப் புலவர் விரிவாகக் கூறுவதால், இங்கே விவரிக்கத் தேவையில்லை.

எழுத்துச் சீர்திருத்தம் செய்ய விரும்பிய அரசாங்கத்தார், அதைச் செய்வதற்கான அறிவும், ஆற்றலும் படைத்த பெருமக்களிடமே அந்தப் பொறுப்பை ஒப்படைத்தனர். 'தினசரி' ஆசிரியர் டி. எஸ். சொக்கலிங்கம், பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், பேராசிரியர் சுவாமிநாதன், டாக்டர் மு வரதராசனார், ரா. பி. சேதுப்பிள்ளை ஆகியவர்களெல்லாம் எழுத்துச் சீர்திருத்தக் குழுவில் இடம் பெற்றிருந்தனர். இந்தப் பெரும் புலவர்கள் தமிழுக்குத் தீங்கிழைப்பவர்களென்றோ, தீங்கிழைப்பவருக்குத் துணைபுரிவார்களென்றோ கூறமுடியாது. சீர்திருத்தக் குழுவினர் அவசரப்பட்டு எதையும் செய்துவிடவில்லை. பலமுறை கூடி, பல மாதங்களாக ஆலோசித்து, தமிழ் எழுத்தாளர்கள் - பத்திரிகை ஆசிரியர்கள் - தமிழ் ஆசிரியர்கள் ஆகியோரை தனித் தனியே கூட்டுவித்து, அவர்களுடைய ஆலோசனைகளையெல்லாம் கேட்டு, அதன்பின்னரே முடிவான அறிக்கையை வெளியிட்டுள்ளனர். ஆகவே, எழுத்துச் சீர்திருத்தக் குழுவினரின் முடிவில் எவரும் குறைகாண முடியாது.

தமிழகம் தனியரசு பெற்றால், தமிழ் அரசாங்க மொழியாகும். அந்த நிலையில், தமிழ் தினசரிப் பத்திரிகைகள் பல லட்சக் கணக்கில் செலவாகும் சிறப்பையும் அடையும். 'லினோ' யந்திரத்தின் துணையில்லாமல் லட்சக்கணக்கில் பிரதிகளை வெளியிடுவது முடியாத காரியம். அதுமட்டுமல்ல, இன்றைய அரசாங்க நிர்வாகத்தில், டைப் அடிக்கும் யந்திரம் பிரதான இடத்தை வகிக்கிறது. ஆகவே, அரசாங்கம் தமிழில் நடக்கின்றபோது, டைப் அடிக்கும் யந்திரமும் தமிழுக்குப் பயன்பட வேண்டியிருப்பதால் விரைவாக டைப் அடிப்பதற்கான வகையில் எழுத்துக்களைக் குறைத்து யந்திரத்தைப் பயன்படுத்தவேண்டியதும் அவசியமாகும்.

பொதுவாக எழுத்துச் சீர்திருத்தக் குழுவினர் செய்துள்ள காரியத்திற்கு நாம் மனப்பூர்வமாகப் பாராட்டுவதோடு, அவர்கள் செய்யத் தவறிய ஒன்றிற்காகவும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அதாவது, உ, ஊ ஒலிகளுக்கு ு, ூ என்ற குறியீடுகளைக் கையாளவேண்டுமென்று ஒரு சாரார் வாதாடினர். அவர்கள் கருத்தை சீர்திருத்தக்குழு ஏற்றுக்கொண்டிருந்தால், மற்றுமோர் மொழிப் போர் மூண்டிருக்கும். அந்த விபரீத காரியத்தைச் செய்ய மறுத்ததற்காக எழுத்துச் சீர்திருத்தக் குழுவினரை மனமாரப் பாராட்டுகிறோம்.

வாசகர்களுக்கு

'தமிழ் முரசு' மாத வெளியீடு இந்த இதழோடு நிறுத்தப்படுகிறது. நவம்பரிலிருந்து வார இதழாக வெளிவரும். வார இதழுக்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவது காரணமாகவே கடந்த இரண்டு மாதங்களாக முரசு வெளிவருவது தடைப்பட்டது. வார இதழில், அரசியல் - இலக்கியம் - திரைப்பட விமர்சனம் - கார்ட்டூன் ஆகிய எல்லா அம்சங்களும் இடம் பெறும்.

முரசு மாத இதழுக்கு சந்தா சேர்ந்தவர்களுக்கு, வார இதழ் அனுப்பி வைக்கப்படும்.

ஏற்கனவே ஏஜண்டாக இருந்தவர்களில் பணம் பாக்கி வைத்திருப்பவர்கள், அடுத்த அக்டோபர் 15-ந் தேதிக்குள் பாக்கி முழுவதையும் செலுத்திவிடக் கோருகிறோம். அப்படிச் செலுத்தாதவர்கள், முரசு வார இதழுக்கு ஏஜண்டாக அங்கீகரிக்கப்படமாட்டார்கள்.

நிர்வாகி,
'தமிழ் முரசு' அலுவலகம்,
1/29, இருசப்ப கிராமணி தெரு, சென்னை-5.

தமிழரசா — திராவிடஸ்தானு?

ம. பொ. சி.

3. பார்ப்பனர் ஆரியரா?

சாதி வேறுபாடுகள் தமிழ் நாட்டில் தொன்றுதொட்டே இருந்து வருகின்றன. ஆனல், சாதிப் பிரிவுக்கான அடிப்படை சங்க காலத்தில் ஒருவிதமாகவும், பிற்காலத்தில் வேறு விதமாகவும் மாறியது.

சங்க காலத்தில், செய்யும் தொழிலையொட்டித்தான் சாதிகள் பிரிக்கப்பட்டன. வேளாண்மை அதாவது பயிர்த் தொழில் செய்வோர் வேளாளரென்றும், பொன் தொழில் செய்வோர் பொற் கொல்லரென்றும், மருத்துவம் புரிவோர் மருத்துவரென்றும், வணிகத் தொழில் புரிவோர் வணிகரென்றும் அழைக்கப்பட்டனர். பண்டைத் தமிழகத்தில் மக்கள் குடியிருப்பும் தொழில்வாரி அமைந்திருந்ததாக இலக்கியங்களால் அறிகிருேம்.

பார்ப்பனர் எனப்படுவோர், தமிழ் நாட்டிலுள்ள பல்வகை சாதியினருள் ஒருவகை சாதியினராவர். பொதுவாக, அவர்கள் வேறு எந்த நாட்டிலிருந்தும் இந்த நாட்டிற்குக் குடியேறியவர்களல்லர். சங்க இலக்கியங்களில் இந்தப் பார்ப்பனர் தமிழ் நாட்டைத் தாய் நாடாகக் கொண்ட தமிழராகக் கூறப்படுகின்றனரேயன்றி, வேறு நாட்டினராகக் கூறப்படவில்லை.

சங்கத்தமர்ந்து தமிழ்வளர்த்த புலவர்களில் பார்ப்பனப் புலவர்களும் பலருண்டு. அவர்களியற்றிய கவிதைகளோ அல்லது இலக்கியங்களோ தமிழ்ப்பண்பு வழிப்பட்டனவே யன்றி, ஆரியப் பண்பு வழிப்பட்டன வன்று. பண்டை நாளில் தமிழ் மக்கள் பார்ப்பனர் என்றும் அல்லாதார் என்றும் பிணக்கு கொண்டு போராடியதாகத் தெரியவில்லை. அதுமட்டுமல்ல; ஓரினத்தவராக ஒன்றுபட்டு வாழ்ந்ததாகவே அறிகிருேம்.

பறம்புமலையாண்ட பாரிவேந்தன் அந்தணனல்லன். அப்படியிருந்தும், கபிலர் என்ற அந்தணப் புலவரும் பாரிவேந்தனும் ஒரு தாய் வயிற்றில் பிறந்த சகோதரரைப் போன்று உறவு கொண்டிருந்தனர். பாரி இறந்த பின்னர் அவனுடைய மகளிரான அங்கவை, சங்கவை என்ற இரு மங்கையரை தம்முடைய கண்களைப் போன்று காத்து வளர்த்தார் அந்தணப் புலவரான கபிலர். அந்த இரு பெண்களை அவர்களுடைய மரபு வழிப்படி இரு மன்னர்களுக்கு மணம் செய்து வைத்து

பிறகு பாரி வேந்தனின் பிரிவாற்றாமையால் உயிர் நீத்ததாக இலக்கியங்கள் கூறுகின்றன.

சங்ககாலப் பார்ப்பனப் புலவர்கள் தங்களைத் தமிழ் நாட்டவராக, தமிழ் இனத்தவராகக் கருதினரேயன்றி - ஆரிய நாட்டினராகவோ, ஆரிய இனத்தவராகவோ கருதியதாகத் தெரியவில்லை.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் ஒருமுறை, ஆரியம் பெரிதா? தமிழ் பெரிதா? என்ற வாதம் எழுந்தபோது, பார்ப்பனப் புலவரான நக்கீரர் ஆரியத்தினும் தமிழே உயர்வுடைத்தென்று வாதாடியதாக வரலாற்றுச் செய்தி கூறுகிறது.

சங்க காலத் தமிழகத்தில் சாதிப் பிரிவுகள் இருந்தனவென்றாலும், சாதிக்குச் சாதி அந்தஸ்தில் ஏற்றத்தாழ்வு இருந்ததாகத் தெரியவில்லை. அந்தணச் சாதியைச் சேர்ந்த தேவந்தியென்பவள் வணிக சாதியைச் சேர்ந்த கண்ணகி தேவியைத் தெய்வமாகக் கொண்டு வழிபாடு செய்து வந்ததாக சிலப்பதிகாரம் கூறுகிறது.

பார்ப்பனச் சாதிப் புலவர்களும் பிற சாதிப் புலவர்களும், அண்ணன் தம்பியரைப் போன்று அன்போடு வாழ்ந்த செய்திகள் இன்னும் பலப்பல. இடையர் சாதியைச் சேர்ந்த இடைக்காடனார், அந்தணப் புலவரான கபிலரின் ஆருயிர்த் தோழர். பரணர் என்ற மற்றொரு பார்ப்பனரல்லாத புலவரும், கபிலரின் உயிர்த்தோழராவார். பிற்கால உரையாசிரியர்கள் இவர்களை, "கபில பரணர்" என்று கூறியிருப்பதொன்றே அந்த இரு புலவர்களின் நட்புக்கு சான்றாகும்.

சேரன் செங்குட்டுவன், தமிழ் வேந்தரின் ஆற்றலைப் பழித்ததற்காக ஆரிய வேந்தன் கனக்-விஜயன் தலையில், கல் சுமத்தினானல்லவா? அந்தச் செய்தி கேட்டதும் மறையோனை மாடலன், ஏனைய தமிழரைப் போலவே மகிழ்ச்சியடைந்ததாக சிலப்பதிகாரத்தால் அறிகிறோம்.

அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை ஆகிய சங்க இலக்கியப் பாடல்களில், பார்ப்பனப் புலவர்கள் பாடிய பாடல்களும் பலப் பல. அப்பாடல்களில் கூறப்படும் பொருள் ஆரிய இனத்தின் பெருமையன்று. தமிழினத்தவரின், வீரமும் காதலுமே விளம்பப்படுகின்றன.

வட இந்தியாவில் குடியேறிய ஆரியரெனப்படுவோரில் சிலர், பிற்காலத்தில் தமிழகத்தில் குடியேறி இருக்கலாம். இக்காலத்திலிருப்பன போன்று, போக்குவரத்து வசதிகள் அக்காலத்திலிருக்கவில்லை. மேலும் வடநாட்டிலிருந்து தென்னாட்டிற்கு வருபவர்கள், இடையே மிக விரிந்தும் உயர்ந்தும், நீண்டும் விளங்குகின்ற விந்திய மலையைக் கடந்தாகவேண்டும். அது அவ்வளவு எளிதன்று. கைபர் கணவாயைக் கடப்பதிலும் கஷ்டமாகவே இருந்திருத்தல் வேண்டும். ஆகவே யெட்கே

(35-ம் பக்கம் பார்க்க)

குடியாட்சித் தமிழ்

தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

“பல்லக்கு எறுவோர் சிலர்; பல்லக்குத் தூக்குவோர் பலர். ஆளப் பிறந்தோர் சிலர்; உழைக்கப் பிறந்தோர் பலர். கற்கப் போவோர் சிலர்; கல்லாது இருப்போர் பலர். இதுவே இயற்கை; இதுவே கடவுள் கட்டளை” என எண்ணிய காலமும் உண்டு. அந்தப் பெரிய அம்மையார் இன்று மலையேறிப் போய்விட்டார். “எல்லோரும் ஓர் நிறை - எல்லோரும் ஓரினம் - எல்லோரும் இந்நாட்டு மன்னர்” என்று பாடுகின்ற காலம் தொடங்கி இருக்கின்றது. “தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் சகத்தினை அழித்திடுவோம்” என்ற பாட்டாளி ஊழியில் வாழ்கிறோம். “குறவருக்கும் மறவருக்கும் விடுதலை” என்று பள்ளுப்பாடி ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம். அனைவரும் இந்நாட்டு மன்னரானால், அனைவரும் கற்கவேண்டுமன்றோ!

ஆதலின், இன்று பள்ளிக் கூடத்தில் புதிய கூட்டம் மிகுந்து வருகிறது. பழைய முறைகள் இங்குச் செல்லாத காசாக மட்கி வருகின்றன. கலக்கம்- குழப்பம்-தயக்கம்-இயக்கம் எங்கும் காண்கிறோம். ஆசிரியர்களே திகைக்கிறார்கள். “புலவர் பட்டம் பெற்றவர்களும் எழுத்துப் பிழையின்றி எழுதக் காணோமே” எனப் பெருமூச்சு விடுகின்றார்கள். உயிருள்ள தமிழை கிளிப்பிள்ளைபோலப் பேசி மேடையைக் குலுக்கும் நண்பர்கள், எழுதுகோலை எடுத்தவுடன் பழைய முறைப்படி எழுத்துக்கள் வரக் காணோம். அதுவும் புதிது. புதிதாகக் கிறுக்குகிறது. முன எல்லாம் பள்ளிக்கு வந்த கூட்டமோ அன்றாடம் எழுத்து நடையாடும் சுற்றுப்புற சூழலில் பிறந்தது முதல் ஆடிப் பாடித் திளைத்த கூட்டம். எழுத்துப் பழக்க உலகில் வாழ்ந்த அந்தக் கூட்டத்திற்கு எழுத்துப் பிழை ஏன் வரப்போகிறது? இன்று குறவரும் நாயாடிகளும் கற்க வேண்டும்; கற்கின்றனர். இவர்கள் கையால் எண்ணியவர்கள். ஒன்றும் செய்யத் தெரியாமல் எழுதிப் படித்துத் தம்மை வேலை வாங்கியவர்களது எழுத்துப் பழக்கத்தைக் கண்டு வயிறு நிறையும் போதெல்லாம் உள்ளூற நகையாடி நகையாடி, வயிறு பசிக்கும் போதெல்லாம் வயிறெரிந்தவர்கள். எழுத்துப் பழக்கம் இவர்களுக்குப் புதுப் பிறவி. ஆதலின் இன்று வரும் கூட்டம் எழுத்துப் பிழையில் வாழ்கிறது. இவர்களுக்கு ஏதோ அருமைப்பாடு இயற்கையில் அந்த எழுத்து முறையில் அமைந்து கிடக்கிறது என்றோ முடிவு செய்ய வேண்டும். இது செந்தமிழின் சீர் கேடன்று; இன்று எழுந்த புது உலகின்

சிக்கல். "முன் எல்லாம் எழுத்துச் சீர்திருத்தம் கேட்கவில்லையே; ஆயிரம் ஆண்டுகளாக எழுதி வரவில்லையா, இன்று என்ன சீர்திருத்தம்" என்று எள்ளி நகையாடிப் பயன் இல்லை. புதிய உலகம்-குடியரசு உலகம் பிறந்திருக்கிறது. அதற்கேற்ற குடியரசு எழுத்து வளரவேண்டும்.

இந்த உலகத்தைக் குழந்தை உலகம் என்று ஓர் அம்மையார் பாடுகின்றார். குழந்தைகள் சிறப்பினை உலகம் அறிந்து வருகிறது. அவர்களே எதிர்காலத் தமிழகம்; எதிர்கால இந்தியா. அவர்கள் கற்றால் தமிழகம் ஒளிரும்; இல்லையேல் இருளும்; அவர்கள் உயர வழி செய்வதே நம் கடன். இன்று உலகத்தினைத் திறந்து வைப்பது கல்வி. குழந்தைகளுக்கு எளிதான முறையில் என்றும் மறவாதபடி மனத்தில் பதிந்து இரத்தத்தில் ஊறி வாழ்க்கையில் வழியுமாறு கல்வி கற்பிக்கவேண்டும் என்ற முயற்சியினை உலகு எங்கும் காண்கிறோம். வார்தா திட்டமும் இந்த வாழ்க்கைக் கல்வி முறையன்றோ.

இந்த முறையில் கல்வி கற்கப் புகும் புதுக்கூட்டம் எழுதப் படிக்கவும் கற்கவேண்டும். அதுதானே பழங்காலக் கல்விப் புதையலை நாம் அடையும் வழி. காலத்தைக் கடந்து கம்பரோடு களிக்கிறோம்; வள்ளுவரோடு வாழ்கிறோம். அம் மட்டுமா? இடத்தையும் கடந்து பல ஆயிரம் மைலுக்கு அப்பால் உள்ள நண்பர்கள் எழுதும் கடிதங்களையும் படிக்கின்றோம். காற்றோடு காற்றாய்ப் பறந்துபோகும் குரல் ஒலியை நிலைக்கவைத்துச் சாலப் பெருவாழ்வு தருவது எழுத்தே ஆகும். இளங்கோ வாழ்வது எழுத்தாலே அன்றோ.

இந்த எழுத்தைப் படிக்கும் போது குழவி ஒரு முறையை எதிர்பார்க்கிறது. "குதிரைக்குக் குர்ரம் என்றால் யானைக்கு யர்ரமோ" என்று சிலர் எளிதாக எள்ளி நகையாடுகின்றார்கள். இவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். நிலம் நம்மைத் தாங்குகிறது; காற்று நம்மைத் தாங்காது. இவ்வாறு ஓர் ஒழுங்கை எதிர்பார்த்து வாழ்ந்து வருகிறோம். நிலம் நம்மைத் தாங்காமல் தண்ணீர்போல ஓரிடத்தே நெகிழ்ந்து கொடுத்தால் நாம் வாழ்வது எப்படி? அடுத்த அடி எப்படி இருக்கும் என உறுதி இன்றி அடி எடுத்து வையாமல் அலைவோம். முன்னறிந்தபடியே உலகம் இப்போதும் இருக்கும் என்ற உறுதியே நம் வாழ்வுக்கும் விஞ்ஞானத்திற்கும் அடிப்படை. குழவிக்கும் இந்த உறுதி உண்டன்றோ. அ ஆ எனப் படிக்கின்றது; அஆ போலவே ஆவன்ன இருக்கக் காண்கிறது. ஆனால், அடுத்த அடி எடுத்து வைக்கும் போது இந்த உறுதி குலைந்து தவறிவிழுகிறது. இயன்னபோல ஈயன்ன இருக்கக் காணாது தயங்குகிறது. எழுதிப் படித்துப் பழகிய நமக்கு இந்த உள்ளக் குமுறல் கேளாது; இளைய

நெஞ்சின் ஏமாற்றம் 'விளங்காது. புதுக்கூட்டம் புகுந்துள்ள பள்ளிகளில் சென்றால் இந்தத் தடுமாற்றத்தினைக் காண்போம். நெஞ்சம் இளகி இருந்தால் குழவியோடு வருந்துவோம்; பழகி இறுகி இருந்தால் குழவி மேல் எரிந்துவிழுவோம்.

எழுத்துச் சீர்திருத்தக் குழுவினர் என்ன செய்தனர்? இகரத்தை எழுதுவது போலவே ஈகாரத்தையும் எழுதி மேலே சுழித்து விட்டனர். கி என்பதன் மேல் விலங்கு இகரத்தின் மேல் பகுதியாக விளங்குகிற மேல் விலங்கே ஆம். கீ என்பதில் காணப்படும் மேல்விலங்கு என்ன கூறுகிறது? சுழித்தெழுதிய மேல் விலங்கோடு ஈகாரமும் இருந்திருக்க வேண்டும் என்று கூறுகிறது. கீ என்று எழுதிய ஓலைச் சுவடிகள் உண்டு. காலஞ் சென்ற நமச்சிவாய முதலியார் குழந்தைகள் அல்லலைக் கண்டு இந்தப் பழைய வடிவத்தினையே தம்முடைய நூல்களில் வழக்கில் கொண்டு வந்தார். ஆகவே பழங்காலைத் தூர்த்துப் புதுக்காலை வெட்டும் சீர்திருத்தமன்று இது. கேடான புதுக்காலைத் தூர்த்துப் பழங்காலைப் புதுக்கி வெட்டும் சீர்திருத்தமே ஆம்.

"உயிர் எழுத்தில் ஐ வேண்டாம்; அய் என்று எழுதிவிடலாம். ஔ வேண்டாம்; அவ் என்று எழுதி விடலாம்." இவ்வாறு சிலர் கூறுகின்றனர். அவ்வாறு எழுதக் கற்றுக் கொடுப்பதில், கேடு ஒன்றும் 'இல்லை.' ஆனால், அதற்காக இந்த ஐயையும் ஔவையும் தமிழ் எழுத்துக்களி லிருந்து நீக்கமுடியாது. ஐ, ஔ வரும் தொல்காப்பியத்தினை எப்படி அச்சிடுவது? நன்னூலை எவ்வாறு பதிப்பிப்பது? ஐ (அஇ) என்ற ஒலி வேறு; அய் என்ற ஒலி வேறு. ஔ(அஉ) என்ற ஒலி வேறு; அவ் என்ற ஒலி வேறு. இந்த ஒலி வேற்றுமையைக் குறிக்க வேண்டிய இடம் மொழி நூல், இலக்கணம் முதலியவற்றில் வந்தே தீரும். ஆதலின், இந்த எழுத்துக்களைப் பொதுவாக ஆளாமல் இருப்பது நல்லது எனப் பலர் உடன்படலாம். ஆனால், அந்த எழுத்துக்களே வேண்டா என்றால் பலர் உடன்படாமல் மறுப்பர். ஆய்த எழுத்து அருவழக்காகியதால் அதனை ஒழித்து விட்டோமா?

ஔ என்பது ஒரு சிக்கலை விளைவிக்கின்றது. பாட்டில் சில எழுத்துக்கள் சந்த இன்பத்தினை நோக்கி மறையும். ஒள்ளழல் (ஒள்—வெளிச்சமான; அழல்-நெருப்பு) என்பதில் ள் இப்படி மறைந்தால் "ஔழல்" என்பதே நிற்கும். இதனை அவ்ழல் என்று படித்தால் என் செய்வது? குழந்தை என்னதான் செய்யும்? வெள்ளரிக்காய் என்பதனை அருணகிரிநாதர் தமது திருப்புகழில், "வெளரி" எனப் பாடுகின்றார். இதனைக் குழந்தை 'வவ்ரி' என்று படித்தால் பிரம்பால் அடித்து என்ன பயன்? நம்மையல்லவா பிரம்பால் அடித்துக் கொள்ள வேண்டும்.

ஔ என்பதன் அறிகுறியாகிற ள என்பதே ளகர ஒலியையும் குறிப்பதால் அன்றோ இந்த இடர்ப்பாடு. இதனைத் தடுக்க வழிசெய்ய வேண்டும். ரகாரத்திலும் ஏகாரத்திலும் அடியில் ஒரு கோட்டினை இடமாக உள்ளுக்குக் குறுக்காக இழுக்கின்றோம் அன்றோ! அதே போல, ள என்பதன் அடியிலும் இழுத்து விட்டால் அதனை ஔ என்பதன் குறியாக அமைத்து விடலாம். அப்போது ஔகாரமும் ளகரமும்,மயக்கத்திற்கு இடம்தராமல் தமிழில் தலை நோயின்றி தனித்தனி வாழும்.

இப்போதிருக்கின்ற உயிர் எழுத்து அச்சுக் கருக்கள் 11. ள என்பது உயிர்மெய்யெழுத்தில் உள்ள கரு; அதனையே இதுவரை ஒகரத்தோடு சேர்த்து ஔகாரத்தினை அடுக்கி வந்தனர். இதற்குப் புதிதாக ஒரு கருவினைப் படைக்க வேண்டி இருத்தலின், இனி உயிர் எழுத்துக் கரு 12 ஆகும். இங்கு முன்னிருந்த ஈ என்றகருவிற்கு வேறொன்று வரும். இங்கே சீர்திருத்தம், எழுத்துக்களின் எண்ணிக்கையைக் குறைப்பது எனத் தொடங்கி மிகுதியே படுத்தியது சீர்திருத்தக் குழு.

எண்ணிக்கையைக் குறைப்பது என்பது ஏன்? இதுவரை என்ன முழுகிப் போய்விட்டது? ஒன்றும் முழுகிப் போகவில்லை. உண்மையே! ஆனால், தமிழ் வாழ வேண்டும். வாழ்கின்றதா? கம்பனில் வாழ்கின்றது; சிலப்பதிகாரத்தில் வாழ்கின்றது. இவை எல்லாம் சென்ற காலத்தின் சிறப்பு. இன்று என்ன? குடியரசு உலகில் வாழ்கின்ற பாட்டாளியிடம் வாழ்கின்றதா?

மோட்டார் ஓட்டி கார்பரேட்டர், காஸ்கட், ரேடியேட்டர் என்றுதானே பேசவேண்டியதிருக்கிறது. இவ்வாறு ஒவ்வொரு தொழிற்சாலையில் சுற்றி வரும்போது என்ன காண்கிறோம்? இங்கே தமிழ் வாழ ஏற்பாடு செய்துள்ளோமா? இவற்றைப்பற்றி எல்லாம் அறியத் தமிழ் நூல் உண்டா? எதிர் காலத்தில் அத்தகைய நூல்கள் வெளிவரும். உலகத் தொழிலாளிகள் காணும் தொழில் நுட்பங்கள் அப்போதைக்கப்போது செய்தித்தாளிலே வருகிற காலம் வரும்; அவற்றை அன்றைக்கு அன்று தமிழில் தமிழ்த் தொழிலாளி படிக்கின்ற காட்சியையும் காண்போம். ஒரு சிலர் கற்பதனைப் பலர் கற்பதாக மாற்றிய புரட்சி எந்திரமே, அச்சு எந்திரம், எழுத்து எழுத்தாக உருக்கி கோத்த காலம் போய் வரி வரியாகப் பக்கம் பக்கமாக உருக்கி வார்க்கும் காலம் வந்துள்ளது. பல்லாயிரம்மைலுக்கு அப்பால் நிகழ்வதனை அதே இமைப்போதில் வானொலி வழியே கேட்கிறோம்; உடனே அதனை மொழி பெயர்த்து அச்சுக் கோத்துச் செய்தித்தாளை வெளியிட வேண்டும். மாலை 5 மணிக்கு வெளிவர வேண்டும் என்றால், $4\frac{1}{2}$ மணிக்கு வந்த செய்தியும் அதிலிருக்க வேண்டும். அரை மணிக்குள் மொழி பெயர்த்து அச்சும் வார்த்துவிட

வேண்டும்; அச்சடித்தும் ஆக வேண்டும். இந்தப் புரட்சியை எண்ணிப் பார்க்க வேண்டும். இதனை மறந்து பேசிப் பயனில்லை. கம்பனைக் கற்க இந்தப் புரட்சி வேண்டாம் என்பீரா? ஒரு சிலர் கம்பனைக் கற்றால் போதும் என்ற மனமுடையோரே இவ்வாறு கூற முடியும். காண்ட் (KANT) என்ற தத்துவ ஆசிரியர் கடபட என்று ஒரு சிலருக்கே விளங்கக்கூடிய வகையில் எழுதிய தத்துவ நூல்களும் மொழிபெயர்ப்பில் பல நூறாயிரம் என்ற கணக்கில் ருஷ்யாவில் செலவாகின்றனவாம். எதிர்காலத்தில் தமிழகத்தில் கம்பன் நூலும் இவ்வாறு செலவாகும்.

நிலைத்து நிற்கின்ற இந்த ஆயிரங் காலத்துப் பயிர்கள் இருக்கட்டும். புற்றீசல் வாழ்விற்கு மேல் வேண்டாது ஒரு மாலைப்போது வாழ்ந்து பாட்டாளி மக்களுக்குத் தொண்டு செய்தால் போதும் என வரும் செய்தித் தாள்கள் இன்று தமிழ் நாட்டிலும் சில போது நூறாயிரம் என்ற கணக்கில் செலவாவது பலருக்கும் தெரிய வேண்டும். நூறாயிரம் பல நூறாயிரம் ஆகப் பெருக வேண்டும். மிகச்சிறிய இலங்கையில் உள்ள சிங்களச் செய்தித் தாள் ஒவ்வொரு நாளும் நூறாயிரம் செல்கின்றதாம். தமிழ் நாட்டில் ஒவ்வொருவரும் கற்கத் தொடங்கினால் எத்தனைச் செய்தித் தாள்கள் செலவாகும்? குடியரசுப் புரட்சியின் அடிப்படையன்றோ, இது. இவ்வாறு வெளிவர வேண்டுமானால், அச்சுக் கருக்கள் குறைவது பெருந்துணையன்றோ. இன்று டைப் அடிப்பதுபோல அச்சு அடித்து வார்க்கின்றனர் அச்சுத் தொழிலாளர். கடிதப் போக்குவரத்துக்கும் எந்திரங்கள் — எழுத்தடிக்கும் எந்திரங்கள்-வேண்டுமன்றோ. எழுத்துக்களின் வரிசை பத்து விரல்கொண்டு சில வரிசைகளில் அடிக்கும் வகையில் அன்றோ அமைய வேண்டும். 90 கருவுக்கு மேல் இருந்தால் இந்த அமைப்பின் உதவியை முற்றும் பெறுவது அருமை. ஆதலின், அரசியலிலும் தொழிலுலகிலும் தமிழ் அரசியல் மொழியாக விளங்கி, எழுத்து அடிக்கும் பொறிகளின் மேல் ஊர்வலம் வர வேண்டுமானால் - பாட்டாளியுலகில் விஞ்ஞானத்தின் உதவி கொண்டு செய்தித் தாளில் எழுத்துவார்க்கும் பொறிகளின் மேல் ஊர்வலம் வர வேண்டுமானால்-எதிர்காலத்தில் வாழ வேண்டுமானால் — எழுத்துக்களின் கருக்கள் குறைய வேண்டும். பிற மொழிகள் இந்த நிலைமைக்கு வராமல் இருப்பதால் நாமும் குட்டையில் புழுங்கவேண்டுமா? இங்கே நாம் ஆங்கிலத்தை மேல்வரிச்சட்டமாகக் கொள்ளவில்லை. அங்கு எழுத்துக்கள் குறைந்திருந்தாலும் அந்த எழுத்துக்களை கொண்டு ஒலிக்கும் தொல்லையைச்சொல்லமுடியாது. அதனை ஒழிக்கவே தம செல்வத்தின் பெரும்பகுதியைக் காலம்சென்ற அறிஞர் பர்னர்ட்ஷா ஒதுக்கி வைத்துள்ளார். இதனாலேயே வேறுமொழிகளை உவமை காட்டாமல் எழுதிப் போகின்றோம்.

இவ்வாறு எழுத்தினைக் குறைப்பதும் மேலே குழந்தைகளுக்கு என விளக்கிய ஒழுங்கினைப் பின்பற்றிக் குறைப்பதே நலமாம்.

இப்போது மெய் எழுத்துக்களுக்கு 18 கரு; அகரத்தோடு சேர்ந்த எழுத்துக்களுக்கு (ஆ, ச...) 18 கரு உண்டு. உயிர் மெய் க, ச என்ற 18 கருக்களையும் வைத்துக் கொண்டு புள்ளியைத் தனியே ஒரு கருவாக வார்த்து க, ச என்பவற்றின் பக்கத்தில் இந்தப் புள்ளியை அச்சடித்து க' ச' என்ற மெய்யெழுத்துக்களைக் காட்டலாம். க விஞ்ஞான உலகில் 105'' டிகிரி என்றெல்லாம் பேசும்போது இதனை கடிகிரி என்றும் படிக்க இடம் ஏற்படும். அதனால் இதனைப்பற்றி மேலே ஆராயவில்லை.

ஆவோடு சேர்ந்துவரும் க் ச் என்பவற்றை எப்படி எழுதுகிறோம். கா- சா என்பவற்றை இப்போது கால்வாங்கி எழுதுகிறோம். கால்வாங்கி எழுதுவதே முறை என எண்ணும் குழவி ணா, றா, னா என எழுதுகிறது. இவ்வாறு முறையாக எழுதும் குழவியைப் "பழைய முறைக்கு மாறாக எழுதுகிறாய் தவறு" என்று அலைக்கழித்து வந்தோம். ஒன்றும் விளங்காமல் மருண்டு நின்றது குழந்தை. ணா, றா, னா என எழுதிவிடுவதே ஒழுங்கு. க, ச என்ற 18 கருக்களோடு கால் என்று கூறும் 'ா' என்ற ஒரு கருவும் இருந்தால் கா, சா என ஆகாரத்தோடு சேர்ந்த 18 உயிர்மெய் யெழுத்தையும் அச்சிட்டு விடலாம். ஆனால் ணா, றா, னா என்ற மூன்று கருக்கள் வேண்டியதே இல்லை. குழந்தையும் களிக்கின்றது; அச்சு யந்திரமும் சீர்படுகின்றது. இந்தச் சீர்திருத்தமும் புதியதன்று. பழைய கல்வெட்டுகளில் ண, ன, ற என்ற எழுத்துக்களைக் கால்வாங்கி எழுதியிருக்கவே காண்கிறோம். பின்னே விரைவாக ஓலையில் எழுதவந்தபோது (னா எழுதியது ண போலவே தோன்றும்) எழுந்த சில குழப்பங்களைத் தடுக்கக் கீழ் விலங்கிட்டு எழுதினார்கள். அத்தகைய குழப்பம் இனி எழுவதற்கு இடமில்லையாதலின் ணா, னா, றா என்பவற்றிற்கு ஓய்வு கொடுத்தனுப்புவது நல்லதே ஆம்.

இதே வகையான குழப்பங்காரணமாக லை, ளை, னை, ணை, (ை என்ற ஐகாரக் குறி ன போல இருப்பதால் மயக்கத்திற்கிடமாயிற்று) என எழுதி வந்தோம். க ச என்ற எழுத்தோடெல்லாம் ஐ வரும்போது இரட்டைக்கொம்பு என்கிற ை என்ற குறியையே முன்னே சேர்த்துக் கை சை என எழுதுகிறோம். ல, ள, ண, ன வரும் போது அந்த முறையை மாற்றி லை, ளை, ணை, னை என எழுதுவதே குழவிக்குப் பெரியதோர் ஏமாற்றம். குழவி தயங்கித் தியங்குகிறது. இனிக் குழப்பத்திற்கு இடம் இல்லை. ஆதலின் லை, ளை, னை, ணை என்றே எழுதிவிடலாம். இந்த வடிவங்களும் பழைய கல்வெட்டுக்களில்

கண்ட வடிவங்களே ஆம். அச்சு எந்திரத்திற்கும், நான்கு வேறு கருக்கள் (லை, ளை, னை, ணை) குறைகின்றன. ை என்ற கரு ஒன்று கொண்டே, க முதலிய வற்றோடு சேர்த்து ஐகாரத் தோடுவரும் 18 உயிர் மெய் யெழுத்தினையும் எழுதி விட லாம்.

க, கா ஆனதும் கி, கீ வருகிறது. இங்கு ஒன்று பார்க்கிறோம். கா என்பதில் க என்பதோடு ஆகாரத்தைக் குறிக்கக் கால் என்கிற 'ா' என்ற குறியைச் சேர்த்து எழுதுகி றோம். கெ என்பதில் ககரத் தோடு எகாரத்தினைக் குறிக்கத் தனியே கொம்பு என்கிற 'ெ' என்ற குறியை எழுதுகி றோம். ஏ சேரும் போது தனியே 'ே' என்ற மேல் சுழித்த கொம்பைத் தனியே எழுதுகிறோம். ஒகரம் சேரும் போது முன்னே கொம்பும் பின்னே காலும் சேர்த்து கொ, சொ என எழுதுகிறோம். மேல் சுழித்த கொம்பும் காலும் தந்து கோ, சோ என எழுதுகி றோம். கொம்பும் ளவும் சேர்த்து கௌ, சௌ என எழுதுகி றோம். இங்கு எல்லாம் உயிர் எழுத்தின் அறிகுறி தனித் தனியே வரக் காண்கிறோம். ஆதலால் இந்த உயிர் மெய் யெழுத்து வரிசைகளுக்குத் தனித்தனி 18 கருக்கள் வேண்டியிருக்கவில்லை. க, ச என்ற 18 எழுத்துக்களோடு கொம்போ, காலோ; கொம்புங் காலோ சேர்ப்பதாலேயே இவை எல்லாம் அமைந்து விடுகின்றன. கால், கொம்பு, மேல் சுழித்த கொம்பு என்ற 3 கருக்கள் போதும். ஆனால் கி, சி என்ற வரிசை வரும் போது 18 கருக்கள் தனியே வேண்டியிருப்பது கண்டு. உயிர் எழுத்து தனித்த குறியாக அமையும் ஒழுங்கும் இங்குப் பிறழ்கிறது. ஆனால் இந்த ஒழுங்கு பிறழ்வதனைக் குழவி கள் உணர்வதில்லை. ஆதலின் அவை இங்கு வெருண்டு மருளு வதில்லை. அச்சு யந்திரத் தொல்லையே இங்கு வெருட்டு றது. இகரத்தின் அறிகுறி யாக வரும் மேல் விலங்கினை யும் ஈகாரத்தின் அறிகுறியாக வருகிற சுழித்த மேல் விலங் கினையும் தனியாகப் பிரித்து அச்சிடலாம். அப்போது இந்த இரண்டு கருக்களையும் முன னரே உள்ள க, ச என்ற கருக்க ளோடு சேர்த்து 18 இகர உயிர்மெய் யெழுத்துக்களையும் அச்சிட்டு விடலாம். 36 கருக் களுக்குப் பதிலாக இரண்டு கருக்களே வார்க்க வேண்டும். 34 கருக்கள் எண்ணிக்கையில் குறையும். இவ்வாறு அச்சிட்ட எழுத்தினைப் படிப்பது முதலில் சிறிது கடுமையாகவே இருக் கும். ஆனால், இளையவளவுக்கு மேல் இந்த விலங்குகள் ஒதுங்கி நில்லாமையால் பழக்கத்தில் படிப்பது எளிதாகிப் போகும்.

கு, கூ என்ற வரிசையிலும் உகர மெய்யெழுத்திற்கு 18; ஊகார மெய்யெழுத்திற்கு 18 என 36 கருக்கள் உண்டு. இவற்றையும் இரண்டாகக் குறைத்துவிடலாம். ஜு, ஜூ என எழுதி வரும் போது ு ூ என்ற குறிகளை உகரத் திற்கும், ஊகாரத்திற்கும் அறி குறியாக எழுதி வருகின்றோம்.

இவற்றையே க ச என்பவற்றோடும்சேர்த்தலாகாதா என்று ஒரு சிலர் மன்றாடினர். இவ்வாறு செய்வது தமிழை முழுதும் வடமொழிக்கிரந்த வடிவில் அமைப்பது போலாம் எனப் பலர் உள்ளம் உருகி நைந்தனர். அவர்கள் கூறுவதனை ஒப்புக்கொள்ளாதவரும் அவர்கள் உருக்கத்தினை மறக்க முடியாது. இன்று தமிழ்நாடு இருக்கும் நிலையில் இந்தப் பூசலில் இறங்குவது குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக் கொள்வதாக முடியும். எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய சீர்திருத்தத்தோடு அமைவதே அறிவுடைமை. ஆதலின் இங்கே ஒரு முடிவும் கூறாமல் வருங்காலத்தின் கையில் உகர ஊகார உயிர்மெய்ச் சீர்திருத்தத்தினை விட்டுவிட வேண்டியதாயிற்று. இகர ஈகாரச் சீர்திருத்தத்தினைப் படித்துப் பழகக் காலமும் வேண்டும். உகர ஊகாரச் சீர்திருத்தமும் உடன் வந்திருந்தால் சீர்திருந்திய எழுத்துக்களைப் படிப்பது அருமையில் அருமையாகி முடிந்திருக்கும். எதிர்ப்பும் வலுப் பெற்றிருக்கும். அச்சு எந்திரத் தொழிலாளரும் இந்த உகர ஊகாரச் சீர்திருத்தமின்றியே எந்திரத்தை எளிதில் அமைத்து விடலாம் என்று உறுதி கூறினர். உகர ஊகாரத்திற்கு அறிகுறியாக ு ூ என்பவற்றைச் சேர்த்து. எழுதுவோரைத் தடுப்பார் யார்? அவர்களுக்கு வேண்டிய குறிகளைப் புதிதாக அமைக்க வேண்டுவதும் இல்லை. அச்சுக் கருவாக முன்னே அமைந்து கிடப்பவை அன்றோ அவை.

இங்குக் கூறிய சீர்திருத்தங்கள் புரட்சிகள் அல்ல. பழமையை ஒட்டியே செல்கின்றன. வேண்டிய அளவுக்கு மேல் இம்மியும் மேல் செல்லவில்லை. எல்லோரும் ஒப்புக்கொண்டவற்றையே முடிந்த முடிபாகக் கொண்டு இந்தச் சீர்திருத்தங்கள் முன் வருகின்றன, மேலும் மாற்றங்கள் வரவில்லையே என யானும் ஏங்குகிறேன்; அதனைப் பின்னர் தெரிவிக்கிறேன்.

எழுத்து மாற்றம் என்பது தமிழில் தான் புதிதாக இந்தியாவில் எழுகின்றது. தமிழனது தனிப் பெருமை அது. மாற்றக்கூடும் என்ற மனப்பான்மை வந்ததே இங்குள்ள சிறப்பு. இது வாழ்க! வழிக்கு எல்லாம் வரும் என்பதற்கு என்ன ஐயம்? வீண் எதிர்ப்பினால் இந்த மனப்பான்மைக்குக் கல்லறை கட்டிப் பயனில்லை.

எவ்வளவோ மாற்றம் வேண்டியிருக்கலாம்; ரோமன் எழுத்திலேயே எழுதி விடலாம். ஆனால் தமிழ் மிகப் பழைய மொழி என்பதனை மறக்க முடியாது. பழைமையை அழிப்பதில் ஏன் இந்த விறுவிறுப்பு? தமிழ் எழுத்து. கண்ணைக் குத்துகிறதா? தொல்லை செய்கிறதா? முதலாளிக்குத் துணைபோகிறதா நம் எழுத்து. இன்று நம் நாட்டில் எழுதப் படிக்கத் தெரிந்தவர் நூற்றுக்குப் பத்துப் பதினைந்து பேரே. விரைவான எழுத்து மாற்றமோ, ரோமன் எழுத்தோ வந்தால் என்ன ஆகும்? இந்தப் பத்துப் பதினைந்து பேரும் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக மாறிவிடுவர். ஒளியை இருட்டாக்குவதா பெருமை.

பேசுவது எப்படி?

"மலைநாடன்"

மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும், வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும்; இழவோ, அவமதிப்போ, தோல்வியோ தங்களுடைய வாழ்வில் இடம் பெறலாகாது என்றெல்லாம் எண்ணுகின்றனர். ஆனால், அப்படி எண்ணுவோரில் பெரும்பாலோர், தாங்கள் எண்ணியபடி வெற்றி பெறுவதில்லை. ஏதோ நூற்றுக்கு ஒன்றிருவரே, தங்களுடைய விடா முயற்சியாலும், நடந்து கொள்ளும் தன்மையினாலும் மேன்மையடைகின்றனர். மற்றவர்கள் மேலுக்கு வர இயலாதவர்களாய் கீழ் நிலையையே அடைகின்றனர். அதற்குக் காரணங்கள் பல. அவற்றில் ஒன்று, பிறரிடம் பேசும் வகைதெரிந்து பேசுகின்ற பண்பாகும்.

ஒரு மனிதன் காலையில் எழுந்தது முதல் படுக்கைக்கு செல்லும்வரை எத்தனையோ பேரிடம் எவ்வளவோ விஷயங்களைப் பற்றிப் பேச வேண்டியிருக்கின்றது. வாய் திறந்துபேசாமலே ஒருசெயலைத் திறம்பட நிறைவேற்ற முடிவதில்லை. ஆகவே மனிதனுடைய வாழ்வில் பேச்சுதான் முதலிடம் பெறுகின்றது.

பணத்தால் நிறைவேறாத காரியங்களும், பேசும் திறமையினால் நிறைவேறியிருப்பதை நாம் கண்டிருக்கிறோம். பேச்சுத் திறமையால் ஆகாத காரியம் உலகில் ஒன்றுமே கிடையாது என்றால், அது மிகையன்று.

நீதி மன்றத்தில் குற்றவாளிகளை விசாரித்துத் தீர்ப்பளிக்கின்றனர் நீதிபதிகள். சில சமயங்களில் தீர்ப்பு, குற்றவாளிகளுக்கு சாதகமாகவும் இருந்து விடுவதுண்டு. அதன் காரணத்தை ஆராய்ந்து பார்த்தோமானால், குற்றவாளியின் வக்கீல் பேச்சுக் கலையில் வல்லவரென்பது புலப்படும்.

விஷயங்களை எப்படித் தொகுத்து கூறுவது எதோடு எதனை இணைத்துப் பேசுவது என்பதை அறிந்தவராகவும் இருப்பார். இத்தகைய வக்கீல்கள் வெகு சீக்கிரத்தில் தொழிலில் வெற்றி கண்டு 'பெரிய வக்கீல்' என்ற பட்டத்தையும் பெற்று விடுவார்கள்.

ஏழையாக இருந்த சிலர், வாணிபம் செய்து பெருத்த பணக்காரர்களாகி விடுவதையும் கண்டிருக்கிறோம். வாழ்நாள் முழுவதும் ஏழையாக இருந்த அந்த வியாபாரி, எப்படி வாழ்க்கையில் முன்னேறி பணக்காரராக முடிந்தது என்பதைச் சிந்திப்போமானால், அவ் வியாபாரி தம்மிடம் பொருள் வாங்க வருவோரின் மனதைக் கவரும் வகையில் நயம்படப் பேசும் ஆற்றல் படைத்தவரென்பதை அறிந்துகொள்ளலாம்.

இதுபோலவே, ஒவ்வொரு துறையிலும் முன்னுக்கு வந்தவர்களின் வாழ்க்கையை ஆராய்ந்தால், அவர்கள், வன்சொல்லின்றி இன்சொல் இயம்பும் திறமுடையவர்களாக இருப்பதைக் காணலாம்.

இனி நம்மைநாமே சிறிது ஆராய்ந்து பார்க்கலாம். நாம் பிறரிடம் எப்படிப் பேசுகின்றோம்? நம்மைவிட தாழ்வானவர்கள் என்போரிடம் எவ்விதம் நடந்துகொள்கிறோம், என்பதைச் சிந்தித்தால், நாம் நண்பர்களுடனும், உற்றார் உறவினர்களுடனும் காரணமின்றி சண்டை போடுகிறோம்; கண்டபடிப் பேசி கெட்டவர்களாகிறோம். மனைவி மக்களுடன் கடுமையாகப் பேசி அவர்களதுமனதை நோகச் செய்கின்றோம். சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருக்கும்போதே, பேச்சின் தன்மையினால், சிறு விஷயம் பெரிதாகி, வாய்ப்பேச்சு வளர்ந்து, அதன் காரணமாக அடிதடிச் சண்டைக்கும் உள்ளாகிவிடுகின்றோம். ஆத்திரம் மிஞ்சுவதால், சிலர் கொலை செய்யவும் அஞ்சுவதில்லை. ஒருவன் தன்னுடைய கட்சிக்காக இல்லாததை எல்லாம் கூறுவான். கட்சிக் கொள்கையை விட்டுக் கொடுக்க மனமொப்பாமல், தவறு எனத் தெரிந்தும் ஓயாமல் பேசுவான். அப்பொழுது நாமும் அவனுக்கு விட்டுககொடுக்காமல் பேசுவோமானால், அது பெரிய அனர்த்தத்தில் கொண்டு போய் விடும். விவாதத்தின் மூலம் வாய்ப்பேச்சுவளர்ந்து விரோதிகளானவர்களும் இன்று ஏராளமாக இருக்கிறார்கள். ஆகையால், எந்த விஷயத்தைப் பேசும்போதும், ஆறஅமர யோசித்துத்தான் பேச வேண்டும். விஷயமில்லாமலும் வழ வழ என்றும் பேசக்கூடாது. மேலும் பேசும்போது நமது வாயிலிருந்து கடுமையான சொற்கள் வரலாகாது. கடுமையான வார்த்தைகள் தான் ஒருவனை மேலுக்குப் போக விடாமல் கீழ்நோக்கி இட்டுச் செல்கிறது.

மனிதனுக்கு கோபம் வரும்போதுதான் கடுமையான வார்த்தைகளும் வரும். கோபம் ஆத்திரமாக மாறும் போது, என்ன பேசுவதென்றே அறியாதவனாய், வார்த்தைகளை வரம்பு மீறி கொட்டிவிடுவரன். கோபம் தணிந்தபின், தான் பேசியதற்கு அவன் வருத்தப்படுவானென்றாலும், அவன் பேசிய பலனை அவன் அனுபவித்தே தீருவான். அது அவனுடைய வாழ்க்கையை வெகுவாக பாதிக்கும். ஆகையால், ஒவ்வொருவரும் தனக்குக் கோபம் வந்தபொழுது பேசுவதில்லை என்ற விரதத்தைக் கைக்கொள்ள வேண்டும். அதைவிட, கோபமே கொள்வதில்லை என்ற முடிவுக்கு வருவது மிக மிக நல்லது, பின்னர். அவனுடைய வாழ்க்கையில் துன்பமென்பதே இருக்காது. பிறருடைய புகழுக்கும் அவன் பாத்திரமாகி விடுவான்.

நாம் எந்த விஷயத்தைப் பேசும்போதும் வெகு ஜாக்கிரதையாகப்பேசவேண்டும். அப்படிப் பேசுவதையும், 'ட்டுக் கத்தரிப்பதைப் போல' நேர்மையாகப் பேச வேண்டும்.

••

சாதாரணமாக, நாம் ஆபீஸில் வேலை செய்யும் பையனிடம், "வாடா" "போடா" என்பன போன்ற வல்லினச் சொற்களை உபயோகிக்கிறோம். அதற்குப் பதில் "வா தம்பி", "வா அப்பா" என அழைப்போமானால், "ஆஹா! ஐயாவுக்கு நம் மேல் எவ்வளவு அன்பு" என்று எண்ணியவனாய், சொல்லிய வேலைகளைத் தவறாமல் விருப்பத்தோடு செய்வான். மேலும், அவனுக்கு உங்கள் மேல் ஓர் தனி மதிப்பு ஏற்படும்.

இன்று, எல்லோரும் அடிமை வேலைகளை வெறுக்கிறார்கள். முதலாளிகளை மட்டம் தட்டவேண்டும் என்று கூறுகிறார்கள். காரணம் என்ன?

ஓர் முதலாளி, தன் கீழ் வேலை செய்யும் ஊழியனைக் கூப்பிடும்போது பெரும்பாலும் "இங்கே வாடா" என்று கூறுவாரேயன்றி, 'வாப்பா' 'வா தம்பி' என்று மரியாதையாகக் கூப்பிடவேமாட்டார். முதலாளிகள் இதுகாறும் பயன்படுத்தி வந்த கொடுஞ்சொற்கள்தான், இன்று அவர்களைப் பிறர் ஏசவும், வெறுக்கவும் செய்திருக்கின்றன.

பேச்சுக் கலை என்றால் என்ன? பேச்சின் இலக்கணம் என்ன? என்பதைப் பற்றி ஆராய்வோமானால், ஒரு வார்த்தையில் அதை விளக்கி விடலாம்.

அதாவது, ஒரு மனிதன் பேசும்போது, அப்பேச்சில் இனிமையான வார்த்தைகள் கலந்திருப்பின், அவன் பேச்சுக் கலையை உணர்ந்தவன்; அவனுக்கு பேசுவதின் இலக்கணம் தெரியும் என்று சொல்லிவிடலாம்.

இனிமையான வார்த்தைகளை பேசுவதுதான் பேச்சே தவிர, மற்ற பேச்சுக்கள் பேச்சல்ல; அது பிதற்றல் தான். நாம் எப்பொழுதும் பேசிக்கொண்டுதான் இருக்கிறோம். ஆனால், அப்படிப் பேசினால், எவ்வளவு நன்மை விளையும், அதனால் அவனுக்குக் கிட்டும் இலாபம் என்ன என்பதை எல்லாம் விளக்கித் திருவள்ளுவர் என்னும் பெரியார் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே பாடி வைத்துள்ளார். அதை இச்சமயத்தில் கொஞ்சம் ஞாபகப் படுத்திக் கொள்வோம்.

எவ்வுளவு விளக்கமாகக் கூறியிருக்கின்றார் பாருங்கள் "மனமுவந்து ஒருவனுக்கு நீ செய்யும் தருமத்தை விட, அவனுடைய மனங் குளிருமாறு ஒரு இனிமையான வார்த்தை சொன்னால் அதே போதுமானது" என்கின்றார். தருமம் கூட நீ செய்ய வேண்டுமென்பதில்லை, முதலில் இனிமையாகப் பேசிப் பழகு என்று இடித்துக் கூறுகிறார் நமது பொய்யாமொழி.

இன்று நமது இல்லங்களில் நடப்பதென்ன? எவனாவது பரதேசி வந்து பிச்சை கேட்டால் முதலில் நாம் அவனுக்கு வழங்கும் பிச்சை வசைதான். மேலும், அவன் அங்கு நின்று இரப்பானேல், மீண்டும் அவனை இரண்டு திட்டுத்திட்டி ஏதாவது கொடுத்து விரட்டுகின்றோம். ஆகையால், இனிமேலாவது நாம் அவ்விதம் செய்யாமல், வழங்குவதற்கு ஒன்றுமில்லாவிடினும், அன்பான மொழிகளையாவது அத்தகையவனுக்கு வழங்குவோமாக!

"இந்த மனிதர்கள் தங்கள் உடல்களை அலங்காரம் செய்ய ஏதேதோ ஆபரணங்களை அணிகின்றார்களே? இதுவா மனிதன் தரிக்கும் அணிகள்? அல்ல; எவனொருவன் இனிமையான வார்த்தைகளைப் பேசுகின்றானோ, அவைதான் அவனுக்கு உண்மையான அழியாத அணிகளாகும். மற்றனவெல்லாம் அணிகளல்ல" என்கிறார் வள்ளுவர். இதோடு விட்டு விட்டாரா? பின்னும் கூறுகின்றார்:

அதாவது, ஒரு மனிதன் கூறும் இனிமையான வார்த்தைகள் நடக்கு இன்

பம் தருகின்றன என அறியும்போது, நாம் ஏன் இன்னொருவரைக் கடுமையான வார்த்தைகளால் பேச வேண்டும்?

ஆகையால், நாம் எப்பொழுதும் கடுமையான வார்த்தைகளைப் பேசவே கூடாது. மிதமாகப் பேசினால் ஒருவித ஆபத்தும் இல்லை. ஆனால், பேசும் போது பிரயோகிக்கும் கடும் வார்த்தைகளினால் தான் கெடுதி ஏற்படுகிறது. ஆதலால் கெடுதியை உண்டு பண்ணும் கொடிய வார்த்தைகளை நம்முடைய பேச்சிலிருந்து முதலில் அகற்றி விடவேண்டும்.

"இனிமையான வார்த்தைகள் ஒருவனிடம் ஏராளமாக இருக்கையில், கெடுதியை உண்டாக்கும் கடுஞ் சொற்களைச் சொல்வதானது, ருசியுள்ள பழங்கள் ஏராளம் இருக்க, பச்சைக் காய்களைப் புசிப்பது போலாகும்" என்கிறது திருக்குறள்.

ஆகையால், இனிமேலாவது நாம் எப்படிப் பேசுவது என்று அறிந்து, அதன்படி நடப்போமாக! பேசும் போது வன்சொற்களைப் பிரயோகிக்காமல், வழ வழ என்று விஷயமில்லாமல் பேசாமல், இனிமையாகப் பேசுவோம்; இன்சொற்களால் உரையாடுவோம்; விருந்தினரை உபசரிப்போம். அப்பொழுதுதான் நாம் இன்னலற்றி இன்ப வாழ்க்கை நடத்த முடியும்.

*

"இலட்சியக் கோமாளி!"

சர்க்கஸ்களில், மக்களை மகிழ்விப்பதற்காக வரும் கோமாளிகளுக்கு, அரசியல் சமூக லட்சியங்களை விளக்கிக் கோமாளித்தனம் செய்வதற்குப் பயிற்சியளிக்க, ருஷ்யப் பல்கலைக் கழகங்களில் 'கோமாளிக் கலை இலாகா' ஒன்று ஏற்படுத்த வேண்டுமென 'சோவியத் விட்டரரிகெஜட்' என்ற ருஷ்யப் பத்திரிகை ஆலோசனை கூறியிருக்கிறது. பூர்ஷ்வா கேளிக்கைகளுக்கும், "பத்தாம்பசலிக் கோணங்கித்தனங்களுக்கும் ருஷ்யாவில் இடமிருக்கக் கூடாதென்றும் அப்பத்திரிகை குறிப்பிட்டிருக்கிறது.

புத்திமான் குடலில் புண் ஏற்படும்

"தமது முயற்சியாலேயே முன்னுக்கு வரக்கூடியவர்கள், தமது தவறுகளையும், பிறர் செய்யும் தவறுகளையும், நுணுக்கமாகக் கவனித்து கவலைகொள்பவர்கள், முட்டாள்தனத்தை ரசிக்க முடியாதவர்கள் ஆகியோருக்கு வயிற்றில் புண் ஏற்படும்" என்று லண்டன் மனோ தத்துவ நிபுணர் டாக்டர் ஹென்றி வில்ஸன் கூறுகிறார். தம்மைப்பற்றி அதிகமாக நினைத்துக்கொள்பவர்களுக்கும் இந்த நோய் ஏற்படுமாம். டாக்டர்களுக்கும் வேளை நேரத்தோடு உணவு கொள்ளாதவர்களுக்கும் இந்த நோய் வரக்கூடும் என்கிறார்.

தமிழரசு அமைக்க வாரீர் !

வித்வான் ப. அரங்கசாமி

1 காலையிலே கால்வயிற்றுக் கஞ்சியுண்டு
கலப்பைதனைத் தோள்வைத்துக் கழனி சென்று
மாலைவரை உழுதிட்டு மண்ணைப்பூசி
மாட்டோடு வீடுவந்து மயக்கங்கொண்டு
ஓலையினால் கட்டியதோர் ஓட்டை வீட்டில்
ஓயாத உழைப்பாலே உள்ளஞ் சோர்ந்து
மூலையிலே முடக்கிட்ட முனியன் தானும்
முகமலர்ந்து வாழுகின்ற காலம் எப்போ!

2 மண்வெட்டி தோளினிலே மாட்டிக்கொண்டு
மரம்வெட்ட அறிவாளும் கையில் ஏந்தி
புண்பட்ட உடலோடு ஏதோ கொஞ்சம்
புசித்திட்ட உணவோடு புறத்தே சென்று
நண்பகலோ நள்ளிரவோ எனறெண்ணுமல்
நாள்முழுதும் வேலைசெய்து நலிவுற்றுங்கே
கண்சிறிதும் தூங்காமல் கழனி காக்கும
கருப்பன்தன் கவலையறும் காலம் எப்போ!

3 பால்சோற்றைக் காலாலே உதைத்துத் தள்ளி
பசி இல்லை என்றழுவும் குழந்தை ஓர்பால்
தோல்வற்றி ஒருவேளை சோறென்றேங்கித்
துயறுற்று வாட்டமுறும் குழந்தை ஓர்பால்
மேலாடை தரைபுரள மேனிமூட
மேலங்கி பல உடுக்கும் மேதை ஓர்பால்
நூலாடை ஒன்றதிலும் நூறு ஓட்டை
நைந்திருக்கும் அதை உடுக்கும் பேதை ஓர்பால்

4 கடுங்கோடைக் கதிரவனின் வெப்பத்தாலே
காடெல்லாம் கரியாகும் நேரந் தன்னில்
நெடுங்கொல்லை அத்தனையும் நன்றாய்க் கொத்தி
நெஞ்சொடிய நீரிரைத்துத் திரும்புங் காலை
கடும்பசியால் தன் தலைவன் முகத்தை நோக்கிக்
கஞ்சிக்குப் பொருள் கொஞ்சம் கொடுங்கள் என்ன
கொடும்புலிபோல் பாய்ந்திடும் அத் தலைவன் தானும்
கொடியமனம் மாறுகின்ற காலம் எப்போ!

5 அந்த கொடுங் காட்சியெல்லாம் அறவே நீங்கி
ஆனந்த வாழ்க்கையது நிலவ வேண்டில்
சொந்தமென தமிழகத்தை நமக்கே யாக்கி
'சோஷலிசக் குடியரசு' அமைத்தல் வேண்டும்.

கந்தலுடை கால்வயிற்றுக் கூழுஞ் சோறுங்
காணுத ஓட்டைவீடு யாவும் நீங்கி
எந்த ஒரு நாடும் நமக் கிணையின்றுகி
இன்பமுடன் வாழும் நாள் அதுவேயாகும்.

6 கைத்தொழிலும் வாணிபமும் நமக்கோ.
கசப்பான செயலெனவே ஆயிற்றந்தோ!
குத்துயிராய் நாம் ஊழலும் காரணத்தைக்
கண்டாயா தமிழா நீ சிந்தித்தாயா!
மெத்தவுமே நாம் சிறந்து விளங்க வேண்டில்
மிகுவலிசேர் 'தமிழரசு' அமைத்தல் வேண்மெ
'பைத்தியமே!' என்று பலர் உரைப்பார், ஆனல்
பாருலகம் பலவிதமென்ருெதுக்கித் தள்ளு.

7 தனக்கென்று தனியரசுஇல்லா விட்டால்
தமிழினம்தன் தலை தூக்கும் நாள்தான் என்றோ!
இனப்பற்றும் எழுச்சியுமே இன்று வேண்டும்
இன்பநிறை 'தமிழரசு' அமைத்தல் வேண்டும்
எனக்கென்ன எப்படித்தான் போனல் என்ன
என்றிருந்தால் என்றென்றும் அடிமை நாமே
உனக்கருகே ஆந்திரர்கள் உரைக்கும் வார்த்தை
உன்காதில் கேட்டிலேயோ தமிழா இன்று.

8 வேங்கடமே தமிழகத்தின் வடக்கே எல்லை
வீண்பேச்சு வெறுங்கதைகள் விளையாட்டல்ல
ஓங்குபுகழ்க் குமரிமுனை தெற்கே எல்லை
உண்மையிது எனவுலகம் அறியச் செய்து
ஆங்காங்கே தமிழரசுக் கழகங் கண்டு
ஆந்திரரின் எல்லைவெறி அடங்கச்செய்து
நீங்காத புகழ் படைத்து வலிமை சான்ற
நேர்மைமிகு 'தமிழரசு' அமைக்க வாரீர்!

9 அன்றொருநாள் தமிழ்த்தாய்தன் நாட்டைக்காக்க
அருமை மகன் ஒருவனையும் போருக்காக
நன்றான வீரவுரை நரம்பில் ஏற
நயமுறவே உரைத்தவனை அனுப்பிப் பின்னும்
சென்றவன் தான் மார்பிலும் விழுப்புண்ணோடு
செத்திட்டான் எனக்கண்டு மகிழ்ந்திட்டாளே!
இன்று தமிழ் நாட்டெல்லைக் கிளர்ச்சி வந்தால்
எனதருமைத் தாய்மார்கள் என்செய்வாரோ!

இலங்கையிலும் தமிழரசுப் போர்!

—செல்வநாயகம்

[திரு. செல்வநாயகம், இலங்கையில் ஒரு தலை சிறந்த வழக்கறிஞர். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் அவரே. இலங்கையை, சிங்கள மாகாணமென்றும், தமிழ் மாகாணமென்றும் இரண்டாகப் பிரித்து இரண்டு மாகாணங்களிலும் சுயாட்சியுள்ள தனித்தனி அரசுகளை அமைத்து அவ்வரசுகள் கொண்ட இலங்கை சமஷ்டி ஒன்றை நிறுவ வேண்டுமென்பது இலங்கை தமிழரசுக் கட்சியின் குறிக்கோள் 'முரசு' வாசகர்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சியின், கொள்கையைப் புரிந்து கொள்வதற்காக அண்மையில், திருகோணமலையில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சி மாநாட்டில் திரு. செல்வநாயகம் நிகழ்த்திய தலைமையுரையின் சுருக்கத்தைத் தருகிறோம்.

—ஆசிரியர்]

இலங்கையில் சுயாட்சியுடைய தமிழ் மாகாணம் நிறுவுவதே தமிழினத்தின் விமோசனத்திற்கான ஒரே வழி. கடந்த காலத்தில் இதைப்பற்றி சிந்தித்த தீர்க்கதரிசிகள் பலர். ஆனால் அவர்கள் ஒன்று கூடினதுமில்லை. அன்றி, ஒரு இயக்கத்தை தோற்றுவித்ததுமில்லை. அதனால் அரசியலில் நாம் இன்று இந்த நிலவரத்தில் இருக்கின்றோம். இன்றைக்கு முப்பது வருடங்களுக்குமுன் இந்தக்கேள்வி எழும்பியிருந்தால், ஆங்கிலேயர் இந்த நாட்டைவிட்டுப் போன காலத்திலேயே, சுயாட்சியுள்ள தமிழ்நாடு இலங்கையிலேயே உண்டாயிருக்கும். சுயாட்சித் தமிழ்நாட்டை உண்டாக்கும் கோரிக்கை; ஒரு இயக்கமாக தொடங்கி, இப்போது இரண்டு வருஷங்களுக்கு மேலாகி விட்டது. இத்தக் கொள்கையைக் கொண்ட நமது தமிழரசுக் கட்சி தொடங்கி பதினாறு மாதங்களாகின்றன. இச் சிறிய காலத்தில், மக்களின் மனதில் அதிசயமான மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இனிமேல், நமது இனத்திற்கு வழி ஒன்றுமே இல்லை என்ற தோல்வி மனமும் தூங்கு முகமுமாய் இருந்தோர் விடுதலை வழியொன்றைக் கண்டோமென்று விழித்துப்பார்க்கிறார்கள்.

நமது கோரிக்கைபற்றி ஆரம்பத்தில் ஐயுற்றவர்கள் பலருடைய மனம்மாறி வருகின்றது. சுயநலம் கருதி எங்களது கட்சியையும், இயக்கத்தையும் அழிக்கவென்று தோன்றியவர்கள் தோல்வி கண்டு திகைத்து நிற்கிறார்கள். நாடெங்கும் எங்களுக்கு ஆதரவு நாளுக்குநாள் பெருகிக்கொண்டே வருகின்றது.

இது நிற்க, கொழும்பிலே இருக்கும் சிங்கள அரசாங்கத்தின் நாளாந்த நடவடிக்கைகள் தமிழ் பேசும் இனத்தை இலங்கையிலிருந்து முற்றாக அழிக்கும் முகமாகவே நடைபெற்று வருகின்றன.

பூர்வீக காலம் தொடங்கி இந்நாட்டில் தமிழ் இனமும், சிங்கள இனமும் வாழ்ந்து வருகின்றன. ஆகவே, இலங்கையின் உரிமைக்காரர்கள் இரண்டு இனத்தவர்களுமாவர். பல தருணங்களில் வெளியே இருந்து வந்து இலங்கையில் குடியேறிய வேறுவேறு குழுவினர் பலர் சிங்கள இனத்தோடு சேர்ந்து சிங்களவராயினர். அம்பலாங்கொடை, பலப்பிட்டியா பகுதியில் வசிக்கும் சலாகம வகுப்பினர், ஒல்லாந்தர் காலத்தில் தென் இந்தியாவிலிருந்து வந்து குடியேறிய மக்களாவர். இவர்களின் சேர்க்

கையால் சிங்கள மக்களின் எண்ணிக்கை அதிகரித்தது. இதில் பிழையொன்றுமில்லை. ஓர் தேசத்தின் நிரந்தர வகுப்பினரோடு வந்தேறிய குடிகளும் சேர்ந்து நிரந்தர மக்களின் தொகையைப் பெருக்குவது இயற்கை. அதுபோல, இலங்கையில் வந்து குடியேறும் மறு குழுவினர்கள் இங்கே நிரந்தரமாய் வாழும் தமிழ் மக்களோடு சேர்ந்து அவர்கள் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்வதும் நியாயமானதே. அதற்குத் தடை செய்வது, இங்கு வாழும் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்குப் பாதகம் செய்வதாகும்.

கடந்த ஒரு நூற்றாண்டில் இலங்கையில் சுமார் 7-அல்லது 8 லட்சம் தமிழ் மக்கள் வந்து குடியேறினார்கள். சர்வதேச அரசியல் நீதியின்படி இவர்கள் இலங்கையில் நிரந்தரமாய் வசிக்கும் தமிழ் மக்களோடு ஒன்றுகூடி வாழ்வதற்கு உரிமை உண்டு. அப்படியிருந்தும், சிங்கள அரசாங்கம் இதற்கு முழு விரோதமான சட்டங்களையும், நடைமுறைகளையும் நடத்தி வருகிறது: சிங்கள ஆட்சி உற்பத்தியான 1947-ம் ஆண்டிற்குப் பின் இந்த 7 அல்லது 8 லட்சம் மலைநாட்டுத் தமிழ் மக்களின் பிரஜா உரிமை பறிபோகச் சட்டங்கள் இயற்றப்பட்டன. இச்சட்டங்களில் முதலாவதை ஜனப் பிரதிநிதிகள் சபையில் விவாதிக்கும் நேரத்தில் நான் கூறினேன்: "இந்த அடி குடியேறிய இந்திய தமிழ் மக்களுக்கல்ல; நிரந்தரமாய் வாழும் இலங்கைத் தமிழ் மக்களாகிய எங்களுக்கே! இன்று அவர்களுக்கு, நாளை எங்களுக்கு."

••

இப்படிப்பட்ட எத்தனையோ எச்சரிக்கைகளைக் கவனியாது, பல தமிழ் பிரதிநிதிகளும், முஸ்லிம் பிரதிநிதிகளும் மலைநாட்டு தமிழ் மக்களின் உரிமைகளைப் பறித்த சிங்கள அரசாங்கத்தின் கொடிய சட்டத்தை ஆதரித்து வாக்களித்தார்கள். நாம் கூறிய தீர்க்கதரிசன வாக்குப்போல இன்று கல்லோயாவின் கீழ் கல்முனைப் பகுதியில், தமிழ் மக்களுக்கு அடி விழுகின்றது. இது நிற்க, இந்த ஏழு அல்ல எட்டு லட்சம் தமிழ் மக்களின் பிரஜா உரிமை பறிபோனதுடன் நிற்கவில்லை; இன்று அவர்களின் வாக்குரிமையும் பறிபோய்விட்டது. மத்திய, ஊவா மாகாணங்களில் தற்போது தயாரித்த வாக்குரிமை இடாப்புகளில் மலைநாட்டுத் தமிழ் முஸ்லிம் மக்களின் பெயர்களெல்லாம் அகற்றப்பட்டுள்ளன. வரப்போகும் தேர்தலில், தற்போது மத்திய ஊவா மாகாணங்களிலிருந்து ஜனப் பிரதிநிதிகள் சபைக்கு வந்திருக்கும் தமிழ்ப் பிரதிநிதிகள் எட்டு பேரில் ஒருவரும் தெரிந்தெடுக்கப்பட மாட்டார்கள். இதுவா ஜனநாயகம்? இதுவா அரசாங்க நீதி?

எட்டு லட்சம் தமிழ் பேசும் மக்கள் அரசியலில் பங்கு பற்றுவதற்கு வழியில்லை. இதுவுமின்றி, இப்பிரிவினருக்கு கல்வி வசதி இல்லை. தம்மைச் சுற்றிலுமிருக்கும் கிராமத்தில் குடியேறுவதற்கு உரிமையில்லை. இன்னும் பல இடையூறுகளுக்குட்பட்டு வாழும் இம் மக்கள் அரசியல் அனாதைகளாகிவிட்டனர் இவர்கள் சிங்களப் பெயர் பூண்டு, சிங்களம் படித்து அவ்வினத்தோடு சேரக் கூடுமானால் அப்போது பிரஜா உரிமை—வாக்குரிமை-குடியேறும் உரிமையோடு சேர்ந்த எல்லா உரிமைகளும் கிடைக்கும்! இதன் கருத்தை ஆராய்ந்து பாருங்கள். நம்மை ஆளும் சிங்கள அரசாங்கத்தில், இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்களுக்கு உரிமை இல்லை. அவ்வுரிமை இருந்திருந்தால் வந்தேறிய

குடிகள் அவர்களோடு ஒன்று கூட முடியும். எதற்காக இப்படியெல்லாம் அரசாங்கம் செய்கிறது? தமிழ் இனத்தின் அரசியல் பலத்தைக் குறைப்பதற்காக வல்லவா? அவர்களின் எண்ணிக்கையை அழிக்கச் செய்வதற்காக அல்லவா? தமிழினம் இப்படி அழிந்து போவதற்கு மாற்று மருந்து உண்டா இல்லையா? அதுதான் கேள்வி. மருந்து இருந்தால் அதை எடுத்து கையாளாமல்விடுவோமா?

அரசியல் துறையில் ஓர் இனம் அழியாமலிருப்பதற்கு பல ஏதுக்கள் தேவை. அவற்றுள் ஒன்று, அந்த இனத்தின் மக்கள் எண்ணிக்கை குன்றுமலிருப்பது. இன்னொன்று அந்த இனம் வசிக்கும் பிரதேசம் சுருங்காமலிருப்பது. தமிழினத்தின் எண்ணிக்கையை அரசாங்கம் எவ்விதம் தாக்குகிறதென்று பார்த்தீர்கள். அத்துடன் நிற்காமல், இவ்வரசாங்கம் தமிழ் பேசும் இனத்தின் உரிமைப்பிரதேசத்தை கை வைக்கின்றது.

கல்லோயாவின் கீழ், நீர் பாய்ச்சும் நிலம் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் பேசும் மக்கள் பரம்பரை பரம்பரையாய் வாழ்ந்த பிரதேசம். இப்பிரதேசத்தில் அரசாங்கம் தன் பணத்தையும், பலத்தையும், ஆதிக்கத்தையும் உபயோகித்து சிங்கள மக்களைக் குடியேற்றுகின்றது.

தமிழ் மொழியின் நிலை ஆபத்தாகி வருகிறது. பேச்சளவில் தமிழும் சிங்களமும் அரசாங்கபாஷைகள் என்று சொல்லுகின்றனர். நடைமுறையிலோ, வர வர சிங்களமே அரசாங்க பாஷையாகிறது.

நமது உரிமைகள் அழிந்து போவதற்கு அடிப்படைக் காரணம் யாது? நம் நாட்டிற்கு வருத்திருக்கும் அரசியல் திட்டம்தான்.

ஒரு நாட்டில் வசிக்கும் மக்கள் எல்லோரும் ஓர் இனத்தைச் சேர்ந்தவர்களாயின், அந்நாட்டில் ஒற்றை ஆட்சி அரசாங்கமே நிலவும். பிரான்ஸ், இத்தாலி, போர்த்துக்கல், இஸ்பானியா முதலிய தேசங்களுக்கு ஒற்றை ஆட்சி அரசியலே ஒத்தது. ஏனெனில் அங்கிருக்கும் மக்கள் ஒவ்வோர் தனியினத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால்உலகிலுள்ள எல்லாத் தேசங்களும் தனி ஓரின மக்கள்மாத்திரம் அடங்கியதாய் இருப்பதில்லை. எத்தனையோ தேசங்களில் ஒன்றிற்கு மேற்பட்ட பல இனங்கள் வசிக்கின்றன. இப்படிபட்ட நாடுகட்கு ஒற்றை ஆட்சி அரசாங்கம் ஏற்றதன்று. இவற்றிற்கு அரசியல் அனுபவத்தில் கண்ட சிறந்த முறை, இணைப்பு அல்லது சமஷ்டி அரசாங்கமே. இது உலகசரித்திரத்தில் கைகண்ட முறை.

சுவிட்ஸர்லாந்து தேசத்தில் மொழிவாரி இனங்கள் மூன்று இருக்கின்றன. ஜெர்மன், பிரெஞ்சு இத்தாலியம். சுவிட்ஸர்லாந்து, இலங்கையிலும் சிறிய நாடு. இலங்கை 25,000 சதுர மைல். சுவிட்ஸர்லாந்து 16,000 சதுர மைல். அப்படியிருந்தும், அங்கே சமஷ்டி அரசாங்கம் நிலவுகிறது. ஒவ்வொரு இனமும் தான் வாழும் பிரதேசத்தில் சுய ஆட்சி அடைந்து நடத்துகின்றது. அங்கே நூற்றுக்கு அறுபதுக்கு மேற்பட்டோர் ஜெர்மன் மொழி பேசும் மக்கள். அங்கு இலங்கையைப் போல், ஒற்றை ஆட்சி நிலவுமாயின், அது அங்கிருக்கும் பெரும்பான்மையினராகிய ஜெர்மனியரின் ஆட்சியாகிவிடும். ஜெர்மன் ஆதிக்கத்துக்கு அடங்கி வாழ அங்கு வாழும் பிரெஞ்சு-இத்தா

லிய மக்கள் ஒத்துக்கொள்ளாத தாலேயே, இனிவாரி சுயாதீனத்தைக் காப்பதற்காக சமஷ்டி அரசாங்கம் வகுக்கப்பட்டிருக்கிறது. நம் நாட்டிலும் தமிழ் மக்கள் சுயாதீனமாய் வாழவேண்டுமானால், இப்போது நடக்கும் ஒற்றை ஆட்சி ஒழியவேண்டும். சமஷ்டி ஏற்படவேண்டும்.

கனடாவைப் பார்ப்போம் அங்கு, இரண்டு மொழிவாரி இனத்தினர் வசிக்கின்றனர். அவர்கள், ஆங்கிலேயரும் பிரெஞ்சு மொழி பேசுபவர்களுமாவர். 1940-ம் ஆண்டில் கானடா தேசத்துக்கு சுயாதீனம் கொடுத்தபோது தேசம் முழுவதையும் ஒற்றை ஆட்சியின் கீழ் அமைத்தார்கள். சிறுபான்மையினராய் அங்கிருந்த பிரெஞ்சு மக்களின் சுயாதீனத்தை இவ்வாட்சி பாதித்தது. ஆகவே, பிரெஞ்சுக்காரர்கள் கிளர்ச்சிசெய்தார்கள். இதன்விளைவாக, 1867-ல் ஆண்டில் அங்கு ஒற்றை ஆட்சி சமஷ்டியாக மாறியது; பிரெஞ்சு மக்கள் தாம் வாழும் மாகாணத்தை சுய ஆட்சியுடையதாக்கிக் கொண்டார்கள்.

ஒன்றிற்கு மேற்பட்ட பல இனங்கள் வாழும் நாடுகளுக்கு சமஷ்டி முறை அரசாங்கமே நல்லதென்பதற்கு அநேக உதாரணங்கள் எடுத்துக் காட்டலாம். நம் அயல்நாடாகிய இந்தியாவில் சமஷ்டி அரசாங்கமே நிறுவியிருக்கிறார்கள். சமஷ்டியில்லாத சில நாடுகளிலும், சிறுபான்மைக் குழுவினர்கள். தம் இனத்தின் சுயாதீனத்துக்காக கிளர்ச்சி செய்து வருகிறார்கள். கிரேட் பிரிட்டனில் ஆங்கிலேயரும் ஸ்காட்ச் மக்களும் ஒற்றை ஆட்சியின் கீழ் மூன்று நூற்றாண்டுகளாக வாழ்ந்துவந்தும், இன்று ஸ்காட்ச் மக்கள் தம் சுயாதீனத்துக்காகப் பெரும் கிளர்ச்சி நடத்துகிறார்கள்; ஸ்காத்லாந்து தேசத்துக்கு மாகாண சுயாட்சி கேட்கிறார்கள். ஸ்காட்ச் மக்கள் தம் மொழியை இழந்த பின்னும் தமது மாகாணத்திற்கு சுயாட்சி கோருகிறார்கள் நாமும நமது மொழி அழியுமுன் நம்மைப்பாது காத்துக் கொள்வோமாக!

இலங்கைத் தமிழர் தப்பிப் பிழைப்பதற்கு வழி இரண்டு. ஒன்று, தமிழ் மக்கள் வசிக்கும் பிரதேசம் முழுவதையும் தனியே பிரித்து தனி அரசாங்கம் அமைப்பது. இதனால் இந்தியா—பாகிஸ்தான் பிரிந்ததுபோல. இலங்கை இரண்டாகப் பிளக்கப்படும். இது கடும் மருந்து: இதை நாம் கேட்கவில்லை.

அடுத்தது, சமஷ்டி அமைப்பு முறைப்படி, தமிழ் பேசும் பிரதேசம் மாகாண சுயாட்சிகொண்டு வாழுவது. இதையே நாம் நாடி நிற்கிறோம். நம் கேள்வி அரசியல் நீதிக்குச் சம்பூர்ணமாய் இயைந்தது. இதுவே நிறைவான ஜனநாயக முறை. ஜனநாயகமென்றால், பொது மக்களின் ஆளுகை. மக்களின் ஒவ்வொரு குழுவினருக்கும் ஆளுகையிற் சரி பங்கிருக்க வேண்டும். இரு மொழிவாரி இனங்கள் வசிக்கும் இந்நாட்டில் இரு இனங்கட்கும் சம உரிமை உண்டாகவேண்டுமானால், ஒவ்வொரு இனத்திற்கும் மாகாண சுயாட்சி கிடைக்கவேண்டும். அப்போது பெரிய இனம் சிறிய இனத்தைத் தீண்ட முடியாது.

சமஷ்டி அரசியல் நடக்கும் முறைகளைப்பற்றி அரசியல் நூல்கள் விளக்கமாகக் கூறுகின்றன. தமிழ் மாகாண அரசாங்கத்திற்கு தன் உள்நாட்டு விஷயங்களில்
(33-ம் பக்கம் பார்க்க)

ஈரான் எண்ணெய்த் தகராறு

சோம. லெ. இலக்குமணச் செட்டியார்

மற்றொரு போர் வருமா? இந்தக் கேள்வி சில மாதங்களாக உலகெங்கும் எழுந்திருக்கிறது. கொரியாப் போர் நிலையில் மாறுதல் ஏற்பட்டுங்கூட பெர்சியா எண்ணெய்க் கம்பெனி பற்றிய தகராறின் பலனைப் போர் ஏற்படக் கூடுமென்ற ஐயப்பாடு நீடித்து வருகிறது. சீனவின் மக்கள் தொகையும், அமெரிக்காவின் பொருள் வளமும், ரஷ்யப் போர்க்கருவிகளின் அளவும் குறைகின்றவரையில் இத்தகைய ஐயம் மக்கள் மனதில் இருந்தே தீரும். இந்த முன்னுரையுடன் பெர்சியப் பிரச்னையை ஆராய்வோம்.

இந்தியாவும் ஈரானும்

பெர்சியா, இந்தியாவுக்கு அருகிலுள்ள ஒரு நாடு. மன்னர் நாதிர்ஷா, முன்னர் இந்தியாமீது படை எடுத்திருந்தாலுங்கூட அண்மையில் பர்சியாவுக்கும் இந்தியாவுக்கும் நல்லுறவு ஏற்பட்டிருக்கிறது. இந்த இரு நாடுகளும் ஒன்றுக்கொன்று தூதர்களைப் பரிமாறிக் கொண்டுள்ளன. வணிக உறவும் நெருங்கி வருகிறது. நமது பண்பாட்டை அறியவும் அந்நாட்டு மக்கள் ஆவலாக இருக்கின்றனர். காளிதாஸ் நாக் என்பார் தலைமையில், சென்ற ஆண்டில் ஒரு கலைத் தூதுக்குழு அங்கே சென்றது. தெஹ்ரான் பல்கலைக் கழகத்தில் இந்தியர் ஒருவர் வடமொழிப் பேராசிரியராக நியமிக்கப்பட்டிருக்கிறார். நமது கல்வி அமைச்சர் மவுலானா அபுல்கலாம் ஆசாத் இம்மாதத்தில் பெர்சியா சென்று திரும்பியிருக்கிறார்.

பெர்சியாவுக்கும் இந்தியாவுக்கும் பண்பாட்டு ஒற்றுமை அதிகமாக உள. தங்களை ஆரிய இனத்தவர் எனக் கருதுவதால், பெர்சியர்கள் தங்கள நாட்டின் பெயரையும் ஈரான் என்று சில ஆண்டுகளுக்கு முன் மாற்றிக் கொண்டனர். சயாமுக்கு தாய்லாந்து என்றும், இந்தியாவுக்கு 'பாரத்' என்றும் மறு பெயர் இருப்பதுபோன்று, ஈரான் என்பது பெர்சியாவின் மறு பெயராகும். இந்தச் சொல்லை இரான் என்றுதான் அந்நாட்டு மக்கள் உச்சரிப்பர்.

ஈரானின் சிறப்பு

நடு நிலக்கடலைச் சுற்றியுள்ள நாடுகளில் மிகுதியானவை முஸ்லிம் நாடுகளாகும். இவற்றுள், குறிப்பிடத் தக்கவை நான்கு. இந்த நான்கில் ஒன்று ஈரான். இதன் நிலப்பரப்பு இந்தியாவில் பாதி. ஆனல், இங்கே $1\frac{1}{2}$ கோடி மக்கள்தான் இருக்கிறார்கள். அதாவது, தமிழ் நாட்டு மக்கள் தொகையை விடக் குறைவு. ஈரானில் மூன்றில் இரு பங்கு வறண்ட பகுதி. காடுகள் இங்கே மிகுதி. பெரும்பாலான மக்கள் சிற்றூர்களிலேயே உளர். ஈராயிரம் ஆண்டுகளாக அடிக்கடி நிகழ்ந்த வெளிநாடுகளின் படையெடுப்பால் இந்த நாடு பல இன்னல்களை அனுபவித்தது; தன் பண்பாட்டை இழந்தது; அதன் மொழி சிதைந்தது; நாட்டின் பலபகுதிகளும் அழிந்தன. ஒரு சிற்றூருக்கு இருபது மைல் தொலைவுக்குப் பின்

னரே மற்றொரு சிற்றூரைக் காண இயலும். இங்குள்ள மக்கள் மிக ஏழ்மையானவர்கள். இவர்களைப் பல கொடுமைகளுக்கும் ஆளாக்கும் 300 நிலச்சுவான்தார்கள்தான், ஈரான் அரசியலாரையும் ஆட்டிவைக்கிறார்கள். இயற்கை வளம் இந்த நாட்டில் மிகக் குறைவு. அந்தக் குறையை நிறையாக்கும் வகையில் இங்கே குறிப்பாகத் தெற்குப் பெர்சியாவில் எண்ணெய்க் கிணறுகள் உள்ளன. இவையே ஈரானுக்குப் பெரும் வருவாய் தருவன.

பெர்சியர்களுடைய மொழி, பெர்சியன் என்பது அரபுமொழி சொற்கள் மிகுதியாக இம்மொழியில் புகுந்து விட்டதால், தனிப் பெர்சிய மொழி இயக்கம் இங்கே தோன்றியிருக்கிறது. இதைத் தனித் தமிழ் இயக்கத்தோடு ஒப்பிடலாம். பெர்சிய மொழியிலுள்ள பழமையான நூல் ஜெண்டா அவஸ்தா என்பது. இது ஜொராஸ்டர் மதம் பற்றிய நூல். இம்மதத்தவருக்குப் பார்சிகள் என்று பெயர். பெர்சியாவில், இன்னும் 10,000 பேர் பார்சிகள் உள்ளர். நம் நாட்டிலுள்ள பார்சிகளின் முன்னோர்களும் பெர்சியாவிலிருந்து வந்தவர்களே. பார்சிகள் தவிர, பெர்சியாவில் அனைவருமே முஸ்லீம்கள் என்று கூறலாம்.

ஈரான் மக்கள் இனிய இயல்பினர். கம்யூனிஸ்ட் கொள்கைகள் ஈரானின் வடக்குப் பகுதியிலுள்ள அசர்பைஸ்கான் இராச்சியத்தில் பரவி வருவதால் மதப்பற்றும் மடாதிபதிகளின் செல்வாக்கும் குறைந்து வருகிறது. மடாதிபதிகளுக்குப் பெரும் பொருள் கொடுத்து, அவர்கள் உதவியால் கம்யூனிசத்தைத் தடுக்கப் பிரிட்டிஷ், அமெரிக்க அரசியலார்கள் முயன்று வருகிறார்கள். பொருளாதாரக் காரணங்களுக்காகக் கம்யூனிசக் கொள்கையை ஆதரித்த போதிலும், ஈரான் மக்கள் ரஷ்யரை விரும்பவில்லை. முற்காலத்தில் ரஷ்யர்கள் தங்கள் நாட்டின்மீது படையெடுத்ததையும் அவர்கள் மறந்துவிடவில்லை. நாட்டுப் பற்றின் வளர்ச்சிதான் எண்ணெய்க் கம்பெனி விவகாரமாக இன்று காட்சி அளிக்கிறது. ஈரான் உள்நாட்டு செயல்களில், பிரிட்டிஷ்—அமெரிக்க நாடுகள் தலையிட்டதன் எதிரொலிதான் இன்று ஈரானில் நடைபெறும் புரட்சி.

ஈரானியர்கள் தங்களுடைய ஆற்றலில் மிகவும் நம்பிக்கையுடையவர்கள்; காரியவாதிகள்; உணர்ச்சி வயப் பட்டவர்கள். எனினும், உணவு—உடை ஆகியவற்றில் ஐரோப்பிய மோகம் அவர்களிடையே உண்டு. ஐரோப்பிய உடைஅணியாதவர்கள் பல்கலைக் கழகத்தில் படிக்கவோ அரசியலாரிடம் ஊழியம் புரியவோ இயலாதாம்.

அண்மைக் காலத்தில் தாய்மொழிப் பற்றுமிகுதியாகியிருப்பதால், புதிய துறையில் பெர்சியர்கள் தங்கள் மொழியில் நூல்களை யாத்திருக்கின்றனர். நம் நாட்டில் ஆங்கிலப் பேராசிரியர்களுக்கு உள்ள மதிப்பும் சம்பளமும், அங்கே பெர்சியப் பண்டி

தர்களுக்கு இருப்பதாக் பெர்சிய தலைநகரில் வடமொழிப் பேராசிரியராக விளங்கும் திரு. குன்ஹன் ராஜா என்னிடம் ணர்.

பெர்சியாவில் இல்லாதவை

மதவெறி, அமைச்சர்களுக்கு முக்கியத்துவம், கல்வியற்ற வருக்கு வாக்குரிமை, பெண்களுக்குத் தனிக்கல்லூரிகள், பெண்களுக்கு வாக்குரிமை ஆப்கனிஸ்தானும், துருக்கி மீது நல்லெண்ணம்.

எண்ணெய்க் கம்பெனி

பாரசீக வளைகுடாவிலிருந்து கருங்கடல் முனைக்கு ஒரு கோடு இழுத்தால் இரு பக்கங்களிலும் எண்ணெய்க் கிணறுகள் உள்ளன. இந்தக் கோட்டுக்கு மேற்கே உள்ள எண்ணெய்க் கிணறுகள் ஈராக்கையும், கிழக்கேயுள்ள கிணறுகள் ஈரானையும்சேர்ந்தவை ஈரானிலுள்ள எண்ணெய்க் கிணறுகள் ஓர் ஆண்டுக்கு 2 கோடி டன் எண்ணெய் தருகின்றன. இதைவிட கூடுதலாக எண்ணெய் உற்பத்தியாகும் நாடுகள் மூன்றுதான். அவை வடஅமெரிக்கா, வெனிசூலா, ரஷ்யா முதலியன.

கடந்த 50 ஆண்டுகளில் ஈரானில் பிரிட்டிஷ் செல்வாக்கு வளர்பிறைபோல் மிகுதியாகியிருக்கிறது. 1906-ல் ஈரான் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. வடபகுதி ரஷ்ய செல்வாக்குக்கு உட்பட்டும், தென்பகுதி பிரிட்டிஷ்செல்வாக்குக்கு உட்பட்டும், நடுப்பகுதி நடுநிலையாகவும் இருப்பதென்ற உடன்பாட்டைப் பேரரசுகள் செய்து கொண்டன. அக்காலந் தொட்டே பிரிட்டிஷார் ஈரானின் அரசியல், பொருளாதாரப் பிரச்னைகளில் தலையிட்டு வருகின்றனர். புகையிலை பயிரிடுவது, அதை உற்பத்தி செய்வது, விற்பது, ஏற்றுமதி செய்வது ஆகியவற்றைப் பிரிட்டிஷார் தம் தனி உரிமையாக்கிக்கொண்டனர். இதை எதிர்த்துப் பெரும் புரட்சி நடைபெற்றதால், பிரிட்டிஷார் அந்தத் தொழிலிலிருந்து விலகிக் கொண்டனர். அதன் பிறகே, எண்ணெய் உற்பத்தி செய்வதில் அவர்கள் முனைந்தார்கள். தம் நாட்டிலுள்ள கனிப் பொருளைப் பக்குவப்படுத்துவதையும், எண்ணெயின் இன்றியமையாமையையும் ஈரான் மக்கள் தெரிந்துகொள்ளவில்லை. இந்தக் காரணங்களால், பிரிட்டிஷார், எவ்வித எதிர்ப்புமின்றி இந்தத் தொழிலில் ஈடுபட்டனர்.

1909-ல் ஆங்கிலோ-ஈரானிய எண்ணெய்க்கம்பெனி தொடங்கப்பட்டது எண்ணெய் உற்பத்தி செய்து, அதைச் சுத்தப்படுத்தி விற்பதே இந்தக் கம்பெனியின் நோக்கம் ஆகும். இந்தக் கம்பெனியின் பெரும்பான்மையான பங்குகள் பிரிட்டிஷ் அரசியலாரிடமே உள்ளன.

1933-ல் கம்பெனிக்கும் ஈரான் அரசியலாருக்கும் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இதன்படி 60 ஆண்டுகளுக்கு எண்

ணெய் உற்பத்தி செய்யும் உரிமை கம்பெனிக்கு வழங்கப் பட்டது. இதற்கு ஈடாக, ஈரான் அரசியலாருக்குக் கம்பெனி ஆண்டுதோறும் ஏறத்தாழ 12 மிலியன் பவுன், அதாவது 16 கோடி ரூபாய் ராயல்டியாகக் கொடுக்க சம்மதித்தது.

இந்த ஆண்டு மார்ச் மாதம் 20-ம் தேதியன்று, எண்ணெய்க் கிணறுகளை நாட்டின் உரிமை யாக்கும் சட்டத்தை ஈரான் மஜ்லிஸ் என்னும் சட்ட சபை யார் நிறைவேற்றினர். இதை எதிர்த்துப் பிரிட்டிஷ் அரசிய லார் பல நடவடிக்கைகளை எடுத் தனர்.

நிற்க, எண்ணெய்க் கிணறு களை நாட்டின் உரிமையாக்கிய காரணத்தை ஆராய்வோம்:

இரண்டாம் உலகப்போரின் பயனாக, கனிப் பொருள் உள்ள நாட்டின் அன்பைப் பெறுவ தற்காக ஈரானுக்கு அருகி லுள்ள நாடுகளில் எண்ணெய்க் கம்பெனிகள் நடத்திய அமெ ரிக்கரும் மற்றவர்களும் ஏற் கனவே உள்ள உடன்பாடு களைத் திருத்தி அமைத்தனர். தங்கள் ஊதியத்தில் மேலும் ஒரு பகுதியை அந்தந்த நாடு களுக்கு விட்டுக் கொடுத்தனர். ஈரானிலுள்ள பிரிட்டிஷ் கம் பெனியார் அவ்வாறு செய்ய வில்லை. ஈரான் மக்களின் மன நிலையை பிரிட்டிஷ் கம்பெனி யார் சரியாக உணராமையே இதற்குக் காரணம். வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும்'' என் பது வள்ளுவர் வாக்கன்றோ?

காடாய்க் கிடந்த பகுதியை வளம் கொழிக்கச் செய்ததற் காக ஈரான் தங்களுக்கு விட் டுக் கொடுக்கவேண்டும் என் பது பிரிட்டிஷாரின் கட்சி.

எண்ணெய்க் கிணறுகளுள்ள அபடான் நகரம் இன்று ஈரா னின் அழகிய பட்டினமாக விளங்குவதையும் அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். இந்தக் கம்பெனியின் மூலதனம் 15 மிலியன் பவுன் அதாவது 20 கோடி ரூபாய் மட்டுமே. ஆனால், கம்பெனிக்கு ஆண்டு தோறும் 120 மிலியன் பவுன் அதாவது 160 கோடி ரூபாய் ஆதாயம் கிடைத்திருக்கிறது. இந்த ஆதாயத்திற்காகப் பிரிட் டிஷ் அரசியலார், ஆண்டு தோறும் 18 மிலியன் பவுன் அதாவது 24 கோடி ரூபாய் வருமான வரி பெறுகிறார்க ளாம். இந்தத் தொகை, ஈரான் அரசியலாரின் ராயல் டியை விடக் கூடுதலாக இருக் கும் போது, அந்த நாட்டு மக் களின் உணர்ச்சி கிளர்ச்சியாக மாறுவது இயற்கையே.

மற்றொரு காரணம், இந்த எண்ணெய்க் கம்பெனி பெற்றி ருக்கும் முறையற்ற சலுகை கள் ஆகும். அங்குள்ள பிரிட் டிஷ் மக்களுக்குப் பலவிதமான சட்டங்களிலிருந்தும் விதி விலக்குகள் கொடுக்கப் பட்டி ருக்கின்றன. பிரிட்டிஷ் கடற் படைக்கும், ஆகாய விமானப் படைக்கும் விற்கப்படும் எண் ணெய்க்கு மலிவான விலை போடப்படுவதும் ஈரான் மக்க ளுக்கு ஆத்திரத்தை ஊட்டி யிருக்கிறது. 'பல வழிகளில்

இந்தக் கம்பெனியார் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்திவருகின்றனர். நாட்டில் எல்லாக் காரியங்களும் தங்கள் விருப்பப்படி நடப்பதற்காகச் சட்டசபை உறுப்பினர் பலரை இக் கம்பெனியார் விலைக்கு வாங்கி வருவதும் இப்போது ஈரான் மக்களுக்குத் தெரிந்துவிட்டது. இந்தக் கம்பெனிக்கே உரிய டெலிபோன் வசதிகளும் நாட்டுநலனுக்கு எதிராக பயன்படுத்தப்படுகின்றனவாம். சுருங்கச் சொன்னால், இத்தாலியின் போப்பாண்டவர் போல, ஈரானில் இந்தக் கம்பெனியார் அரசியலாருக்குள் மற்றொரு அரசியலாராக இருந்து ஆட்டிவந்திருக்கிறார்கள். புதுச்சேரியில் அரவிந்த ஆசிரமம் 'கலை' 'ஆத்மீகம்' என்ற பெயர்களால் அரசியல் சூழ்ச்சி செய்து வருவது போன்று, ஈரானில் வாணிகம் என்ற பெயரால் எண்ணெய்க் கம்பெனி அரசியல் சூழ்ச்சிசெய்து வந்திருக்கின்றது. ஈரான் நாட்டின் பல தொழில்களையும் எடுத்துக் கொண்டிருக்கும் பிரிட்டிஷ் அரசியலார், இப்போது ஈரான் அரசியலாரையே எதிர்க்கத் துணிந்திருப்பது நடுநிலையாளர் ஏற்றுக்கொள்ள இயலாத செயலாகும்.

எண்ணெய்க் கிணறுகளை நாட்டின் உரிமையாக்கிய சட்டத்தை எதிர்த்து உலகக் கோர்ட்டில் பிரிட்டிஷ் அரசியலார் வழக்குத் தொடுத்தனர். இறுதி முடிவு கூறுமுன், தற்காலிகமாக பிரிட்டனுக்கு ஆதரவாகக் கோர்ட்டார் உத்தரவிட்டனர். இதை ஈரான் ஏற்றுக் கொள்ளவில்லை. 1933-ம் ஆண்டு ஒப்பந்தத்தை ஈரான் மீறியிருப்பதாகப் பிரிட்டிஷ் அரசியலார் கூறுகின்றனர். அதனால், பிரிட்டிஷ்—ஈரான் உறவு சீர்கெடும் என்றும் அவர்கள் பயமுறுத்துகின்றனர். இந்தக் கூற்றுக்களும் ஈரான் ஒப்புக்கொள்ள இயலாதவை. 1933-ம் ஆண்டு உடன்பாட்டை ஈரான் சட்டசபை ஏற்றுக்கொள்ளவில்லை. சட்டசபைகள் ஆதரிக்காத சர்வதேச உடன்பாடுகள் செல்லாது என்பது இன்றைய உலக வழக்கு. அந்த உடன்பாடு சட்டசபை ஆதரவு இன்றி, 'ஷா'வால் செய்து கொள்ளப்பட்டது. ஆகவே, அது சம அந்தஸ்துடைய இரு கட்சியார் செய்துகொண்ட உடன்பாடு அன்று. மேலும், அந்த உடன்பாடு ஈரானுக்கும் பிரிட்டனுக்கும் ஏற்பட்டதுமன்று; ஈரானுக்கும் தனித்த ஒரு கம்பெனிக்கும் ஏற்பட்ட உடன்பாடே ஆகும். அந்தக் கம்பெனியில் பிரிட்டிஷ் அரசியலாருக்குப் பங்கு இருப்பதால் மட்டுமே, அது இரு நாடுகளுக்கிடையே ஏற்பட்ட உடன்பாடு ஆகிவிடாது.

இந்த அடிப்படையான பிரச்சினைகளைப் பற்றி ஈரான்-பிரிட்டிஷ் அரசியலார்கள் மாறுபட்ட கருத்துடையவர்களாக இருக்கின்றனர். இந்த நிலையில் இவர்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்த அமெரிக்கத் தலைவர் ட்ரூமன் முயன்றுவருகிறார். அவருடைய தூதர் ஹாரிமன் ஈரானுக்கு வந்திருக்கிறார். அதன் பலன் என்ன ஆகும் என்று முன்

கூட்டி முடிவுகட்ட இயலாது. பொருத்திருந்து பார்ப்போம்.

இறுதியாக ஒன்று கூறலாம். ஈரானில் நிகழ்வது, காலனி முறையை வல்லமையுள்ள அரசுகளுக்கும். அரசியல் விடுதலையை நிறையாக்க விரும்பும் சிறு நாடுகளுக்கும் ஏற்பட்டிருக்கும் ஒரு போராட்டமாகும். இந்தப் போராட்டத்தில் உலக மக்களில் பெரும்பகுதியினரின் அனுதாபத்தை ஈரான் எதிர் பார்க்கலாம்.

(27-ம் பக்கத் தொடர்ச்சி)

முழு ஆதிக்கம் இருக்கும்சுய ஆட்சி மாகாணங்களை இணைப்பதற்கு ஒரு மத்திய அரசாங்க யிருக்கும். மத்திய அரசாங்க ஆதிக்கத்திற்கு விடப்படும் விஷயங்களாவன: பாதுகாப்பு, போக்குவரத்து, அன்னிய தேச விவகாரங்கள், நாணயம் உண்டாக்குதல் முதலியவை. சுய ஆட்சி மாகாணங்களுக்கு உரியவை. விவசாய நீர்ப்பாசனம்,நீர் நிலையங்கள், சுகாதாரம், கல்வி ஆகியன. இவ்வமைப்பின்படி தமிழர் பெரும்பாலோராய் வாழும் வட கிழக்கு மாகாணங்களில் கட்டும் குளங்கள், கல்லோயாத் திட்டம், அங்கு நடக்கும் குடியேற்றத் திட்டம் முதலியவை தமிழரசினல் நடத்தப்படும். அப்போது யாரை அங்கு குடியேற்றுவோ மென்று சொல்லிக் காட்டத் தேவையில்லை. தமிழ் மாகாணத்தில் அரசாங்க பாஷை எதுவாயிருக்கு மென்பதற்கு யார் மனதிலும் ஐயத்திற்கிடமில்லை.

பிரஜா உரிமையைப் பற்றிப் பலர் கேட்கிருர்கள். அமெரிக்க ஐக்கிய மாகாணங்களில் நடப்பது சமஷ்டி அரசு. அங்கே ஒருவன் பிரஜையா அல்லவா என்று நிர்ணயிப்பது மாகாண அரசாங்கத்தின் ஆதிக்கத்தில் அடங்கியது. ஆனதினுற் பிரஜா உரிமைச் சட்டங்கள் மாகாணத்திற்கு மாகாணம் வித்யாசமாயிருக்கின்றன. சில மாகாணங்களில், காப்பிரிகளுக்குப் பிரஜா உரிமை இல்லாமலும், வேறுசில மாகாணங்களில் அவ்வினத்தினருக்குப் பிரஜா உரிமை உள்ளதாயும் மாகாண சட்டங்கள் பிறந்திருக்கின்றன. சிங்கள மாகாணத்தில் என்னவாயிருந்தபோதிலும், நம் தமிழ் மாகாணத்திலோ, இங்கு வந்து குடியேறி எங்களோடு ஒன்ருயிருக்கும் தமிழ்மக்கள் எல்லோருக்கும் பிரஜா உரிமையும் வாக்குரிமையும் இருந்தே தீரும்.

நமது மாகாணத்தின் பொருளாதார நிலவரம் எப்படியிருக்கும் என்ற கேள்வி கிளம்பியிருக்கின்றது. தனி மாகாணமாக நாம் சீவிக்க முடியாதென்று தலைவர்கள் சிலர் பயமுறுத்துகிருர்கள். தேயிலை, ரப்பர், தென்னை நமது நாட்டில் இல்லையாம். இலங்கையிலே தமிழ் அரசாங்கமொன்று பல நூற்ருண்டாக நிலவியிருந்த தென்பதை அவர்கள் மறந்து விட்டார்கள் அக்காலத்தில் பிரஜைகள் திருப்தியாக வாழ்ந்ததுமன்றி, தமிழரசர்கள் பிற நாட்டின் மேற் படையெடுத்துச் சென்ருர்கள். நாட்டில் போதிய பொருளாதார பலமின்றேல் இவை யெல்லாம் நடந்திருக்குமா. ? ஐரோப்பியர் ஆட்சியின் கீழ் அவர்களின் பராமுகத்தால் தமிழ் மாகாணங்களின் பொருளாதார நிலை குன்றிய தென்பது ஓர் அளவிற்கு உண்மை எதிர் காலத்தில் அதிகமான விருத்திக்கு வசதியானதும் நிலவளம், நீர்வளம் நிறைந்ததுமான பூமி தமிழ் வழங்கும் மாகாணங்களிற்

றுன் உண்டு. பெரும்பாலன பய்னற்றுக் கிடக்கின்றன. தற்கால விவசாயத்துக்குத் தேவையானது நீர்வளம் உள்ள சமதரை. இதிற்றுன், இயந்திரங்களை உபயோகிக்க முடியும். இந்த ரகசியத்தை அறிந்த சிங்கள அரசாங்கம் 'கல்லோயா' முதலிய திட்டங்களைத் தொடங்கியிருக்கிறது. கல்லோயாவின் பின் கந்தளாய், அதன் பின் மன்னார் பகுதியில் அருவியாற்றுத் திட்டம் என வரும். இப்படி இன்னும் அநேக திட்டங்களுக்கு இடமுண்டு. இவை நிறைவேறுங் காலத்தில், தமிழ் மாகாணங்களே தம் தேவைக்கு மேல் அதிகமான பொருளாதாரம் உடையனவாக இருக்கும்.

உலகமெங்கும் நடக்கும் சமஷ்டிகள் ஒரு குடும்பத்துக்கு ஒப்பானவை. குடும்பத்தில் ஒரு சகோதரன் உழைப்பாளியாகவிருப்பான்; இன்னொருவன் நோயாளியாயிருப்பான். இன்னுமோர் பிள்ளை படித்துக் கொண்டிருப்பான். ஐக்கியமான குடும்பமா யிருக்குங்கால், எல்லா வருமானத்தையும் ஒன்று சேர்த்து, அதிக பணம் தேவையான பிள்ளைக்கு அதிகமாகத்தான் செலவு செய்ய வேண்டும். நோயாளிக்கு வருவாய் ஒன்றுமில்லாதிருந்தாலும், அவன் சிகிச்சைக்குக் குடும்பப் பணம் அதிகமாகச் செலவழியும். உழைப்பாளி சகோதரனின் வருவாயை உழைப்பாளியே மட்டும் செலவிடுவதாயின், அதைக் குடும்பமென்று சொல்லமுடியாது.

இது போலவே, சமஷ்டி நாடுகளில் மத்திய அரசாங்கமும், மாகாண அரசாங்கங்களும் நடந்து கொள்ளுகின்றன. பல சமஷ்டி நாடுகளில் வருமானம் குறைந்த மாகாணங்கள் உண்டு. அதாவது, தங்கள் செலவிற்குப் போதுமான வருமானமில்லாத மாகாணங்கள். இவ்வித பற்றுக்குறை மாகாணங்கள் ஆஸ்திரேலிய சமஷ்டி, கனடா சமஷ்டி முதலிய பல்வேறு சமஷ்டிகளிலும் இருந்து வந்தன. 1947-ம் ஆண்டிற்கு முன் நடந்த இந்திய அரசாங்கத்தில், சிந்துமாகாணமும், வடமேற்கு எல்லைப்புற மாகாணமும் பற்றுக்குறை மாகாணங்களாகவே இருந்தன. அம் மாகாணங்களுக்கு மத்திய அரசு பண உதவி புரிந்து வந்தது. அது போலவே, மற்ற சமஷ்டிகளிலும் பற்றுக்குறை மாகாணங்களுக்கு அந்த அந்த மத்திய அரசாங்கங்கள் பணம் உதவி வந்தன. அவ்வாறு மத்திய அரசாங்கம் பண உதவி புரியாவிடில், தன் வருவாயைக்கொண்டுவாழமுடியாதமாகாணத்தை சமஷ்டிக்கு வெளியே விரட்டிவிடுவது போலாகும். அப்படி விரட்ட ஒரு தேசமும் விரும்பாது.

இலங்கையில் அமைக்க விருக்கும் தமிழ்மாகாணம், தன் செலவுக்கேற்ப போதிய வருவாயுடையதாயிருக்குமென்பது எனது அபிப்பிராயம். அப்படிப் போதிய வருவாய் இல்லாவிடினும், சமஷ்டி முறையில், மத்திய அரசாங்கம் பணம் கொடுத்து உதவவேண்டும். இல்லாவிடில் நாடு இரண்டாய்ப் பிளக்கும். அப்படிப் பிளப்பதை சிங்கள மக்கள் ஒருபோதும் விரும்பார்கள். உள் நாட்டுச் சுயாட்சி மாகாணமாகப் பிரிவதற்கே இவ்வளவு வெறுப்பு காட்டுபவர்கள், இலங்கை இரண்டாய்ப் பிளந்து நம் நாடு சுதந்திரத் தனியரசு ஆவதற்கேற்ற மாதிரி நடந்து கொள்வார்களா? தமிழ் மாகாணத்தின் பொருளாதாரத்தைப் பற்றி நாம் பயப்படத் தேவையில்லை. பயத்திற்கிடமிருந்தாலும், இனம் அழிவதிலும் பார்க்க, சுருங்கச் ஜீவிப்பதே நலம்.

இருந்து தெற்கில் குடியேறிய ஆரியர்களின் எண்ணிக்கை அதிகமிருந்திருக்க முடியாது.

அப்படிக் குடியேறிய ஆரியர்களும், தம் இன இயல்புகளில் பெரும்பாலானவற்றை இழந்து, தமிழ் இன இயல்புகளைக் கடைப்பிடித்து தமிழரோடு தமிழராகக் கலந்திருக்க வேண்டும். அதே காரணத்தால் ஆரியருடைய பழக்க வழக்கம் சிலவற்றையும் தமிழரும் ஏற்றுக் கொண்டிருத்தல் வேண்டும். இம்மாதிரி இனக்கலப்புகள் இந்தியாவில் மட்டுமின்றி உலக நாடுகள் எல்லாவற்றிலுமே ஒவ்வொரு காலத்தில் ஏற்பட்டிருக்கின்றன. தோன்றிய காலத்திலிருந்து இன்னொரு இனத்தவரோடு தொடர்பு கொள்ளாமல், அவர்களுடைய பழக்க வழக்கங்களில் இம்மியளவும் ஏற்றுக் கொள்ளாமல் இருந்த ஒரு இனத்தை உலக வரலாற்றில் காண முடியாது.

ஆனால், திராவிட இயக்கத்தார், வரலாற்றை வாசித்ததில்லையோ? வாசித்திருப்பினும், உண்மையை ஒப்புக்கொள்ளும் வழக்கமில்லையோ தெரியவில்லை.

திராவிடத்தார் கூற்றுப்படி எந்தக் காலத்திலோ, எந்தக் காரணத்தாலோ ஆரிய இனத்தவரின் பழக்க வழக்கங்கள் சிலவற்றைத் தமிழ் நாட்டுப் பார்ப்பனர்கள் ஏற்றுக்கொண்டார்களென்பதற்காக அவர்கள் ஆரிய இனத்தார் என்றால், அப்புறம் தமிழ்நாட்டு இஸ்லாமியர் கதி என்னாகும்? கிறிஸ்தவர்கள் கதி என்னாகும்?

ஆரிய இனத்தின் பழக்க வழக்கங்களை ஏற்றுக்கொண்டதில் தமிழ் நாட்டு பார்ப்பனருக்கேயன்றி, பார்ப்பனரல்லாதாருக்கும் பங்குண்டு.

தமிழ்நாட்டு வைணவப் பார்ப்பனர்களில் ஒரு சாரார், தமிழுக்காக செய்துள்ள தொண்டு அளவிடற்பாலது. வடகலைப் பார்ப்பனருக்கும் தென்கலைப் பார்ப்பனருக்குமிடையே நடந்துவரும் சண்டை, மதச் சண்டையன்று; மொழிவழிப் பட்ட கலைச் சண்டையே. தமிழ் மொழி வழங்கும் நாட்டில் வடமொழி ஆதிக்கம் செலுத்துவது கூடாதென்பதே தென்கலைப் பார்ப்பனர்களின் வாதம். "வேதம் தமிழ் செய்த மாறன் சடகோபன்" என்ற வரியொன்றே தென்கலைப் பார்ப்பனர்களின் தமிழ்ப் பற்றுக்கு சான்றாகும்.

இற்றை நாளில், பார்ப்பனத் தமிழர்களுக்கும் - பார்ப்பனரல்லாதார் எனப்படும் தமிழர்களுக்குமிடையே பழக்க வழக்கங்களில் வேற்றுமை இருக்கலாம். இதுபோன்ற வேற்றுமை, பார்ப்பனரல்லாதார் எனப்படும் சாதியினரிடையேயும் இருக்கத்தான் செய்கிறது.

பார்ப்பனர்கள் பேச்சுமொழியல்லாத வடமொழியை நேசிக்கிறார்கள் என்றால், இஸ்லாமியத் தமிழர்கள், பேச்சு மொழியாகிய உருதுவை தாய் மொழியாகவும், அரபியை வேத மொழியாகவும் கொண்டு போற்றுகின்றனர். அப்படியே கிருஸ்துவத் தமிழர்களில் பலர், கிருஸ்துவ மத வேதமாகிய

போர்க்களப் புலவன் பாரதி

[செப்டம்பர் 11, 12 தேதிகளில் எட்டயாபுரத்தில் நடைபெற்ற பாரதி விழாவில் திரு. ம. பொ. சிவஞானம் பேசியதன் சுருக்கம்:]

வான் புகழ் கொண்ட வள்ளுவர், கவியுலகச் சக்கரவர்த்தி கம்பர், புரட்சிக் கவி இளங்கோ ஆகிய முப்பெரும் புலவர்களைப் பெற்றெடுத்த பெருமை தமிழகத்துக்கே உரிமை.

"யாமறிந்த புலவரிலே
கம்பரைப்போல் வள்ளுவர்போல்
இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே
பிறந்ததில்லை; உண்மை,
வெறும் புகழ்ச்சியில்லை'

என்று பாரதியாரே பெருமிதத்துடன் பாடுகிறாரென்றால், அந்த முப்பெரும் புலவரின் பெருமை செப்பும் தரமோ!

பாரதியார், வள்ளுவரைப் போன்று சமுதாயத்தின் எல்லாத் துறைகளுக்கும் பயன்படக் கூடிய நீதி நூல் எழுதவில்லை. கம்பரைப் போன்று, பன்னீராயிரம் கவிதைகளை மழையாகப் பொழியவில்லை. இளங்கோவைப் போன்று, மாபெரும் காவியம் செய்யவில்லை. அப்படியிருந்தும், அந்த முப்பெரும் புலவருக்கும் இல்லாத வகையில், பாரதிக்கு நாடெங்கும் விழா நடக்கிறது. பண்டிதரேயன்றி, பாட்டாளி மக்களும் 'பாரதி எங்கள் கவி' எனப் பாராட்டுகின்றனர்.

தமிழர், தனி இனத்தவர்; தமிழகம் தனி நாடு. ஆகவே, தமிழருக்கென்று தனிப்பான்மையுண்டு—பண்புண்டு. பாரதியார் தமிழர் பாதையில் சென்று தமிழ்ப் பண்பு வழி பிரசாரம் செய்தார்.

'வந்தேமாதரம் என்போம்'

எனக் கூறிய பாரதி, அடுத்த மூச்சிலேயே,

"எங்கள் மாநிலத் தாயை
வணங்குதும் என்போம்"

என்று முன்னதன் "பொருளை, தமிழ்வழி மொழி பெயர்த்துக் கொடுத்தார். ஆம்; தமிழன் எந்தக் கருத்தைச் சொன்னாலும், அதைத் தமிழருக்குப் புரி

பைபிளை லத்தீன் மூலம் படிப்பதையே பெருமையாகக் கருதுகின்றனர். இந்த வேற்றுமைகளுக்காக, இவர்களையெல்லாம் தமிழ் நாட்டாரல்லரென்றோ, அல்லது அந்நிய நாட்டாரென்றோ கூறிவிட முடியுமா? ஒருபோதும் முடியாது.

பார்ப்பனர்களுக்கும் 'பார்ப்பனரல்லாத' தமிழர்களுக்கும் உத்தியோகத் துறைகளில் போட்டி இருக்கலாம். சிறுபான்மை சாதியினர் பெரும்பாலான உத்தியோகங்களைக் கைப்பற்றுவதை எதிர்த்து, பாதிக்கப்பட்ட சாதியினர் நீதி கோரிப் போராடலாம். அது தமிழ் இனத்தவருக்குள்ளேயே நடக்கும் போரேயன்றி, இரு வேறு இனத்தவரிடையே நடக்கும் போரன்று.—'தமிழ் முரசு'

யும் மொழியில் சொல்ல வேண்டுமென்பதே பாரதியாரின் கருத்து.

'ஜெய் ஹிந்த்' என்று சொல்லக் கேட்டாலே, காது கசக்கிறது தேசீய விரோதிகளுக்கு! அதை 'இந்தியா வெல்க!' எனத் தமிழில் சொல்லுங்களென்றால், சீற்றம் வருகிறது சில தேசீயத் தோழர்களுக்கு! பிற மொழியை வெறுப்பது, உண்மைத் தமிழ் உணர்ச்சியன்று; அதுபோன்றே தமிழை மறந்து, புரியாத மொழியில் கோஷிப்பதும் தேசீயமன்று.

தமிழ் நாட்டின்பால் தனிப்பற்று கொள்வது பாரத நாட்டின் ஒற்றுமைக்குப் பகை என்று பேசுகின்றனர் சிலர். அப்படியே, பாரத நாட்டை நேசிப்பவன், தமிழினத்தின் விரோதி என்று ஏசுகின்றனர் வேறு சிலர். மொழிவழி இன உணர்ச்சியும், நிலவழி நாட்டுணர்ச்சியும் வெவ்வேறானதாயினும், ஒன்றுக்கொன்று விரோதமானதல்ல. இதை,

'வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்
வாழிய பாரத மணித் திருநாடு'

என்ற பாடலில் மிகத் தெளிவாக வற்புறுத்துகிறார் பாரதியார். முதற்கண் தமிழை வாழ்த்தி, பின்பு தமிழரை வாழ்த்தி, அப்புறம் பாரத நாட்டை வாழ்த்துகிறார். இந்தப் பாடல் இன்றைய தேசீயவாதிகளுக்கு பாரதியார் கற்றுத் தரும் பாலபாடம் எனலாம்.

'அண்ணன் தம்பியானாலும், வாயும் வயிறும் தனித் தனிதான்' என்பது பழமொழி. அது போல, தமிழரல்லாத ஏனைய மொழிவழி இனத்தார், தமிழருக்கு அண்ணன் - தம்பிகள்தான்! ஆயினும், 'தமிழ் நாடு' என்று நினைக்கின்ற போதுதான் தமிழர் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும், ஒரு தனி உணர்ச்சி ஏற்படுகிறது; ஊக்கம் பிறக்கிறது. தமிழருக்கு மட்டுமல்ல - பிற இனத்தாருக்கும் அப்படித்தான்! தன்னை 'வங்காளி' என்று நினைத்துக் கொள்ளும் போதுதான் வங்க நாட்டாரின் உள்ளத்திலே உவகை பொங்குகிறது. இந்த இன உணர்ச்சியை மறைக்காமல் வெளியிடுகிறார் பாரதியார்.

"பாருக்குள்ளே நல்லநாடு
எங்கள் பாரதநாடு"

என்று பாடிய பாரதியாரே,

"செந்தமிழ் நாடென்னும்
போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது
காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற
பேச்சினிலே—ஒரு
சக்திபிறக்குது மூச்சினிலே"

என்றும் பாடுகிறார்.

ஆம்; இன உணர்ச்சியுள்ள தமிழனுக்கு, வேங்கடத்துக்கு வடக்கேயுள்ள பாரத நாடு, பகை நாடன்று; உறவுக்குரிய நல்ல நாடுதான். பகையுணர்ச்சியற்ற தமிழனுக்கு பாரத நாட்டை நினைக்கின்றபோது உள்ளத்திலே சமரச உணர்ச்சி பிறக்கிறதென்பது உண்மையே. ஆனால், தமிழ் நாட்டை நினைக்கின்றபோதோ, நமது மூச்சிலே ஒரு சக்தி பிறக்கிறது; நரம்பிலே முறுக்கேறுகிறது.

தமிழ் நாடு, ஓம்பிப் பெற்றெடுத்த அன்னைக்குச் சமமென்றால், பாரத நாட்டை நம்மைப் போற்றி வளர்க்கும் செவிலித் தாயெனக் கூறலாம். ஈன்ற தாயைப் போன்றே, வளர்த்த செவிலியும் சேயின் அன்புக் குரியவள்தான்.

செந்தமிழ்நாடு, தமது முந்தையோர் நாடு மட்டுமல்ல; தந்தையர் நாடு என்றும் பாடுகிறார் பாரதியார். இதன் பொருளறியாமல், "பாரதியார் ஆரியராதலால், தமிழ்நாட்டை தந்தை நாடென்கிறார். அவருக்குத் தாய்நாடு வடநாடு போலும்!" என்று வம்பளக்கின்றனர் சில வகுப்பு வாதிகள்.

பாரதியார் தமிழ் நாட்டைத் தந்தையர் நாடெனக் கூறியது ஓரிடத்தில்தான். பலவிடங்களில் தாய் நாடென்றே கூறி தலை வணங்கிப் போற்றுகிறார்.

> சீனம் மிசிரம் யவனரகம்—இன்னும்
> தேசம்பலப்பல சென்றேடி—அங்கு
> தங்கள் புலிக்கொடி மீன் கொடியும்
> சால்புறக் கண்டவர் தாய்நாடு

என்றும்,

> " தமிழ்த்திரு நாடுதன்னை — பெற்ற
> தாயென்று கும்பிடடி பாப்பா "

என்றும் பாடியிருப்பதை மறுப்பார் யார்? அது மட்டுமா? 'தமிழ்நாடு' என்ற சொல், சுவையில்,

> " அமிழ்தில் இனியதடி பாப்பா "

என்று வாயினிக்கக் கூறுகிறார். மற்றும், தமிழ்நாட்டோடு பாரதியாருக்கு-ஆம்-பார்ப்பன சாதியில் பிறந்த பாரதியாருக்குள்ள உறவு இன்று - நேற்று முளைத்ததல்ல. தொன்றுதொட்டு இன்று வரை தொடர்ந்து வருவது என்பதை,

> "......................எங்கள்
> ஆன்றோர்கள் தேசமடி பாப்பா"

என்று பெருமையோடு பேசுகிறார்.

பாரதியார், 'புரட்சிக் கவி' எனப் போற்றப்படுகிறார். அது பொய்யல்ல; உண்மைதான். ஆனால், அவருடைய புரட்சி உள்ளத்தை எதிலே காண்பது?

> " காலா இங்கே வாடா—உன்னைக்
> காலால் மிதிக்கின்றேன் "

என்றாரே, அந்தக் கடுஞ் சொற்களிலா?

> பாதகம் செய்பவரைக் கண்டால்--நீ
> பயங் கொள்ளலாகாது பாப்பா
> மோதி மிதித்துவிடு பாப்பா—அவர்
> முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா

என்றாரே, அந்த வன் சொற்களிலா?

> தனியொருவனுக் குணவில்லையெனில்
> ஜெகத்தினை அழித்திடுவோம்

என்றாரே, அந்தச் சுடு சொற்களிலா? இல்லை இல்லை. 'உயிருண்ணுங் காலனை மிதிப்பேன்', 'பாதகம் செய்வோர் முகத்தில் உமிழ்வேன்', 'உழைப்போருக்கு உணவு தர மறுக்கும் உலகினை அழிப்பேன்' என்ற வாசகங்களெல்லாம் பாரதியாரின், வேதனை உள்ளத்திலிருந்து வெளிவந்த வெறியூட்டும் சொற்கள். ஆனால், புரட்சி என்பது ஆவேசமல்ல; அறிவில் விளையும் மாறுதல்.

பாரதியார், இன்றைய சமுதாயத்தின் ஒவ்வொரு துறையிலும் மாற்றங் காண விரும்பினர்.

பொருளாதாரத் துறையில், தனியுடைமையைத் தகர்த்தெறியும் பொது உடைமையை வேண்டினர்.

அரசியல் துறையில், முடியரசுக்கு முடிவுகட்டும் குடியரசை விரும்பினர்.

சமுதாயத் துறையில், ஆண் - பெண் என்ற வேற்றுமையை விலக்கி, ஏழை - பணக்காரன் என்ற ஏற்றத் தாழ்வைப் போக்கி, பண்டிதர் - பாமரர் என்ற பாகுபாட்டை நீக்கி மனிதர் யாவரும் சரிநிகர் சமானமாக வாழும் நிலையைத் தோற்றுவிக்க விரும்பினர்.

அத்தகைய ஒரு நல்ல சமுதாயத்தை அமைப்பதற்கான வழிகளையும் வரையறுத்துக் கூறினர்.

பாரதியார், கடவுள் நம்பிக்கை கொண்டவர். ஆகவே, தமக்கு வருத்தம் நேர்ந்த போதெல்லாம் கடவுளை நோக்கி வரம் வேண்டினர். ஒரு சமயம், காளி தேவியை நோக்கி கவிதைத் திறம் பெற வரம் வேண்டுவார். எதற்காக? தம் பாட்டுத் திறம் கொண்டு பணம் சேர்க்கவா? இல்லை.

"என் பாட்டுத் திறத்தாலே
இவ் வையத்தைப்
பாலித்திட வேண்டும்"

என்றே வரம் வேண்டினர்.

மற்ருேர் சமயம் சர்வேசனை நோக்கி,

"மேலோர்கள் வெஞ்சிறையில்
வீழ்ந்து கிடப்பதும்
நூலோர்கள் செக்கடியில்
நோவதுவும் காண்கிலையோ"

என்று, கப்பலோட்டிய தமிழர் சிறையில்பட்ட இன்னலை நினைந்து கண்ணீர்விட்டுக் கதறினர்.

பின்னொரு சமயம், பிஜித் தீவின் கரும்புத் தோட்டத்திலே கண்ணகி வழிவந்த பெண்ணனங்குகள் படும் கஷ்டத்தை நினைத்து,

"பெண்ணென்று சொல்லிடிலோ—ஒரு
பேயு மிரங்குமென்பார்—தெய்வமே
நினதெண்ண மிரங்காதோ?"

என்று, வந்தனை வழிபாட்டுக்குரிய தெய்வத்தை நிந்தனை செய்து பாடுவார்.

தமிழ் ஒரு பெருங்கடல் என்றால், பாரதி இலக்கியம், அக்கடலிலே மிதந்து செல்லும் ஓடமெனலாம். தமிழ்க் கடலில், கம்பன் கவிதை—இளங்கோவின் காவியம்—வள்ளுவனின் நீதி நூல் — வள்ளலாரின் அருட்பா போன்ற பல ஓடங்கள் மிதந்து செல்கின்றன. எல்லா ஓடங்களும் நமது மதிப்பிற்குரியவைதான்.

பாரதியார் தமிழ்க் கவிஞர் மரபிலே இறுதியானவர் அல்லர். அவரினும் திறம் மிக்க கவிஞர்கள் இன்னும் எத்தனையோ பேர் தோன்றப் போகிறார்கள். ஏன்? இப்போதே தோன்றியிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் விளக்கி, உற்சாகம் தந்து உலகத்திற்கு அறிமுகப்படுத்துவோமாக!

★

மதிப்புரை

தமிழரசில் முஸ்லிம்கள் :

இயற்றியவர்: கவிஞர் கா. மு. ஷெரீப்; வெளியிட்டோர்: சமுதாயப் பதிப்பகம்; சென்னை 14. விலை அணா மூன்று.

இந்நூலாசிரியர், தேசிய உள்ளம் படைத்த தமிழரசுவாதி. தமிழ் மக்கள், மதத்தால் பல பிரிவினராயினும், மொழிவழி ஒரே இனத்தார் என்பதை வரலாற்றுச் சான்றுகளுடன் இந்நூலில் வற்புறுத்துகிறார். இந்து தமிழர்களுக்கும், இஸ்லாமியத் தமிழர்களுக்கும் தொன்றுதொட்டு இன்றுவரை இருந்துவரும் இனத் தொடர்பை மிகச் சுவைபட விளக்குகிறார்.

மத உணர்ச்சி, கடவுள் நம்பிக்கை, சர்வதேசீயம் ஆகிய நல்லியல்புகளைக் கடைப்பிடித்து வரும் தமிழ் முஸ்லிம்களில் சிலர் அவை அத்தனைக்கும் விரோதிகளான திராவிடத்தார்களோடு தொடர்பு கொண்டுள்ளதை ஆசிரியர் வன்மையாகக் கண்டிக்கிறார். இதனால், எதிர்காலத்தில் இஸ்லாத்துக்கு விளையவிருக்கும் கேடுகளையும் எடுத்துக்காட்டி எச்சரிக்கிறார்.

முஸ்லிம் தமிழர்களையன்றி, முஸ்லிம் அல்லாத தமிழர்களும் அவசியம் படிக்கவேண்டிய நூல். நல்ல விறுவிறுப்பான நடை; தெரிந்துகொள்ள வேண்டிய வரலாற்றுச் செய்திகள் நிறைந்தது. சர்வ சமய ஒற்றுமையைப் போதிக்கும் அழகிய அட்டைப் படத்துடன் கூடியது.

சிலம்பு (மாத இதழ்):

ஆசிரியர்: பகவதியப்பன்; நாகர்கோயில் (தென் திருவிதாங்கூர்); விலை இரண்டணா.

தமிழரசுக் கொள்கைகளைப் பரப்ப வெளிவரும் ஏடுகளில் இதுவும் ஒன்று. திராவிட இயக்கத் தோழர்களின் நாசவேலைகளிலிருந்து தமிழ்க் கலாசாரத்தைக் காப்பதையும் கடமையாகக் கொண்டுள்ளதாக ஆசிரியப்பகுதி அறிவிக்கிறது. தன் பெயருக்கேற்ப சிலப்பதிகாரச் சிறப்பினை விளக்கும் கட்டுரைகள் பல இம் முதல் ஏட்டில் இடம் பெற்றுள்ளன.

தமிழ் மக்களின் ஆதரவைப் பெறுவதற்குத் தகுதியுள்ள ஏடு.

செங்கோல்

சந்தா விவரம்

உள்நாடு

தனிப் பிரதி	0	1	0
ஆண்டு சந்தா	3	0	0

வெளிநாடு

தனிப் பிரதி	0	1	6
ஆண்டு சந்தா	4	8	0

அலுவலகம்:

1/29, இருசப்ப கிராமணி தெரு,

திருவல்லிக்கேணி :: சென்னை-5.

Edited, Printed & Published by M. P. Sivagnanam at the Kannagi Achagam, 1-29, Irusappa Gramani Street, Triplicane MADRAS-5.

பெரியகடை வீதி கோயமுத்தூர்